வாராந்த சஞ்சிகை
ஓகஸ்ட் 26 - செப்டெம்பர் 01, 2015

# சுடர் ஒளி

பக்கம் 24
விலை 30/-



# தடம் புரளும் உள்ளக விசாரணைகள்



# கைகொடுக்குமா 'வாலு'





கமல், விஜயை விட படத்தை வெளியிடுவதற்கு நீண்ட நாள் 'வாலு'வுக்காக கஷ்டப்பட்டிருக்கிறார் சிம்பு. 3வருடங்களுக்கு பிறகு சிம்பு நடிப்பில் வெளிவரும் படம் வாலு. சிம்பு அஜித் ரசிகர் என்பதால் விஜய் ரசிகர்கள் சிம்புவை எதிர்ப்பார்கள். ஆனால் வாலுவிற்கு விஜய் உதவி செய்ததால் தல தளபதி ரசிகர்கள் ஆதரவுடன் வந்துவிட்டான் வாலு.

வழக்கம் போல வேலைக்கு செல்லாமல் ஊர்சுற்றும் வடசென்னை வாலிபராக வருகிறார். சந்தானம், விடிவி கணேஷ் நண்பர்களாக வருகின்றனர். கிராமத்திலிருந்து சென்னைக்கு படிக்க வந்திருக்கும் பெண்ணாக வருகிறார் ஹன்சிகா. மகன்களை திட்டும் அப்பாவாக இல்லாமல் வித்தியாசமான அப்பாவாக இருக்கிறார் ஆடுகளம் நரேன். படம் முழுக்க முறைத்துக் கொண்டிருக்கும் வில்லன் கொஞ்சம் நல்லவனாகவே இருக்கிறார்.

வாலுவின் கதை, ஹன்சிகாவின் மொபைல் சிம்புக்கு கிடைக்க அதற்கு பிறகு தொடரும் சந்திப்புகளால் சிம்புவுக்கு ஹன்சிகா மீது காதல்வருகிறது. ஆனால் ஹன்சிகாவிற்கு அவர் மாமாவின் மகனுடன் நிச்சயமாயிருப்பதால் அதிர்ச்சியடைகிறார் சிம்பு. ஹன்சிகாவை காதலிக்க வைக்க சிம்புவுக்கு 10நாள் கெடு ஏற்படுகிறது. அதற்குள் ஹன்சிகா சிம்புவை காதலித்தாரா? ரவுடியை எப்படி சமாளித்து ஹன்சிகாவுடன் சேர்ந்தார் என்பது மீதிக்கதை.








படத்தின் பலமே சிம்பு தான். சிம்பு சந்தானம் 'ரைமிங்' நகைச் சுவை நம்மை சலிப்படையாமல் பார்த்துகொள்கிறது. விடிவி கணேஷ்க்கு குட்டி பையா என்ற பெயர், சிம்பு அடிக்கடி எனக்கு வெக்கமா இருக்குதுனு சொல்றதலாம் சூப்பர். ஹன்சிகா வழக்கம்போல கவர்ச்சி, நடிப்பில் தனது திறமையைக் காட்டியிருக்கிறார். சிம்பு குடும்பத்தினர் சிம்புவை போல வாலுத்தனம் செய்வது ரசிக்கவைக்கிறது.

படத்தின் உச்சகட்டமாக சிம்பு வில்லனை பேசியே வீட்டிற்கு அனுப்பிவிடுவது அருமை. படத்தில் சண்டைக்காட்சிகள் நம்பும்படியாக இல்லை. ஊகிக்கக்கூடிய திரைக்கதை படத்தின் பலவீனம்.

'நிக் ஆர்ட்ஸ்' சார்பில் சக்கரவர்த்தி தயாரித்திருக்கும் இப்படத்தை சிம்பு சினி ஆர்ட்ஸ் தமிழகம் முழுவதும் வெளியிடுகிறது. தமனின் இசையில் 'யூ ஆர் மை டார்லிங்', தாறுமாறு பாடல்கள் சூப்பர். மற்றவை சுமார். பின்னணி இசை நல்லா இருக்கு. சக்தியின் ஒளிப்பதிவு படத்திற்கு ஏற்றதுபோல் இருந்தது. கதை, திரைக்கதை, வசனம் எழுதி படத்தை விஜய்சந்தர் இயக்கியிருக்கிறார். படத்துல வசனங்களுக்கு பல இடங்களில் கைத்தட்டல் எழுகிறது.

படம் முழுக்க அஜித் ரசிகர்களுக்கு கொண்டாட்டம் தான். பல தடவை தல பாட்டு, படத்தை வைத்து கைதட்டல் வாங்குகிறார் சிம்பு. இதுல எம்.ஜி.ஆர், ரஜினி, அஜித், எஸ்.டி.ஆர் ஒரே பாட்டுல கெட்டப் வேற. இதனால் விஜய் ரசிகர்களுக்கு கடுப்பு.

# தடம் புரளும் உள்ளக விசாரணைகள்

- ஆசாத்

**ஆட்சி மாற்றத்தின் முன்பு முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற கொலைகள், காணாமற் போதல் கள் போன்ற சில குற்றங்கள் முடக்கப்பட்டன அல்லது கைவிடப்பட்டிருந்தன. அவற்றில் அதிகாரம் படைத்தசிலர் சம்பந்தப்பட்டிருந்தாலேயே அவை திட்டமிட்டு மழுங்கடிக்கப்பட் டன எனக் கூறப்பட்டது. ஆனால் தற்சமயம் அவற்றில் கொழும்பில் கடத்தப்பட்டுக் காணாமற் போன தமிழ் இளைஞர்கள் விவகாரம், ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை, கேலிச்சித்திர ஊடகவியலாளர் பிரகீத் எக்கலிக் கொடை காணாமல் போனமை, ரம்மி வீரர் தாஜூதீனின் கொலை போன்ற சில விடயங்கள் தூசு தட்டி வெளியே எடுக்கப்பட்டன.**

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனிதகுல விரோத நடவடிக்கைகள் என்பன தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. இந்த முறை நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் கூடத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பவற்றின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கை முன் வைக்கப்பட்டது. தமிழ் மக்களும் தமது ஆதரவு வாக்குகள் மூலம் தமது முழுமையான ஆணையை வழங்கியுள்ளனர்.

ஆனால் முன்னைய மஹிந்த அரசும், தற்போதைய அரசும் கூட சர்வதேச விசாரணையை அனுமதிக்கப்போவதில்லை எனப் பிடிவாதம் பிடித்து வருகின்றன. ஆனால் தற்சமயம் உள்ள அரசு ஒரு சாண் முன்னேறி சர்வதேச கண்காணிப்பில் சர்வதேச தரத்திலான உள்ளக விசார ணையை நடத்தப்போவதாகத் தெரிவித்து வருகிறது. இதில் சர்வதேச கண்காணிப்பு என்பது எவ்வகையில் அமையும் என்பது தெளிவுபடுத்தப்பட வில்லை. அரசு சர்வதேச கண்காணிப்பாளர்கள் என்ற பேரில் தனக்கு இசைவான சிலரை நியமிக்குமானால் அதில் அர்த்தம் இருக்க முடியாது. மஹிந்த ராஜபக்ஷ காணாமற் போனோர் தொடர்பான விசாரணைக்கும், சர்வதேச விசாரணையாளர்கள் என்ற பெயரில் ஒரு சில தமக்குச் சார்பானவர்களை நியமித்து கண்துடைப்பு நாடகம் நடத்தியதை நாம் மறந்து விட முடியாது. அந்தக் கண்காணிப் பாளர்கள் ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்படும் அதிகாரமுள்ளவர்களாக இருப்பார்களா என்பதே கேள்வி.

எப்படியிருப்பினும் உள்ளக விசாரணை எனப்படும் போது குற்றம் சாட்டப்பட்ட தரப்பினரால் நியமிக்கப்படுபவர்களால் நியமிக்கப்படும் விசாரணைகளால் நியாயத்தை நிலை நிறுத்த முடியாது என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடாகும். எனவே தான் தமிழ் மக்கள் சர்வதேச விசாரணைகளைக் கோரி வருகின்றனர்.

ஆட்சி மாற்றத்தின் முன்பு முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற கொலைகள், காணாமற் போதல் கள் போன்ற சில குற்றங்கள் முடக்கப்பட்டன. அல்லது கைவிடப்பட்டிருந்தன. அவற்றில் அதிகாரம் படைத்தசிலர் சம்பந்தப்பட்டிருந்ததாலேயே அவை திட்டமிட்டு மழுங்கடிக்கப்பட் டன எனக் கூறப்பட்டது. ஆனால் தற்சமயம் அவற்றில் கொழும்பில் கடத்தப்பட்டுக் காணாமற் போன தமிழ் இளைஞர்கள் விவகாரம், ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை, கேலிச்சித்திர ஊடகவியலாளர் பிரகீத் எக்கலிக் கொட காணாமல் போனமை, ரக்பி வீரர் தாஜுதீனின் கொலை போன்ற சில விடயங்கள் தூசு தட்டி வெளியே எடுக்கப்பட்டன. அதன் அடிப்படையில் சில அதிகாரிகள், கருணா அணியைச் சேர்ந்த ஒருவர், பாதாள உலகக் கோஷ்டியினர் எனப் பலரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர். இவர்களில் சிலர் தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

அதன் காரணமாக புதிய ஆட்சியில் இலங்கையின் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் செயற்பட ஆரம்பித்து விட்டதாக ஒரு தோற்றப்பாடு ஏற்படுத்தப்பட்டது.

அண்மையில் சிங்கள ஊடகமொன்று வெளியிட்ட தகவலில் அந்த நம்பிக்கை சிதறடிக்கப்படும் நிலையே தோன்றியுள்ளது. இராணுவ மேலாதிக்கம் எல்லா விசாரணைகளையும் தடம் புரள வைத்து விடுமோ என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. அதாவது அந்த ஊடகவியலாளரும், கேலிச்சித்திரக் கலைஞருமாகிய பிரகீத் எக்கனக்கொட காணாமற் போனமை தொடர்பாக அண்மையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர் பாரத் லக்ஷ்மன் கொலை பற்றிய விசாரணைகள் இடம்பெற்ற போது பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கோத்தபாய ராஜபக்ஷவின் கட்டளையின் பேரில் துமிந்த சில்வா கேட்டுக்கொண்டதற் கமையத் தானே பிரகீத் எக்கலிக்கொடவைக் கொலை செய்து நீர்கொழும்புக் கடலில் புதைத்ததாகச் சாட்சியளித்திருந்தார் என நியூலங்கா நியூஸ் என்ற இணையத்தளம் செய்தி

(22ஆம் பக்கம் பார்க்க)



**அரசு சர்வதேச கண்காணிப்பாளர்கள் என்ற பேரில் தனக்கு இசைவான சிலரை நியமிக்குமானால் அதில் அர்த்தம் இருக்க முடியாது. மஹிந்த ராஜபக்ஷ காணாமற் போனோர் தொடர்பான விசாரணைக்கும், சர்வதேச விசாரணையாளர் கள் என்ற பெயரில் ஒரு சில தமக்குச் சார்பானவர்களை நியமித்து கண்துடைப்பு நாடகம் நடத்தியதை நாம் மறந்து விட முடியாது. அந்தக் கண்காணிப் பாளர்கள் ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்படும் அதிகாரமுள்ளவர்களாக இருப்பார்களா என்பதே கேள்வி.**



# கிரீடத்தை இழக்கும் கிரீஸ் 02

ஜி.எஸ்.எஸ்.

அமெரிக்க பங்குச் சந்தையின் தாயகமான வால் ஸ்ட்ரீட் 2008இல் சரசரவெனச் சரிந்தது. அங்கு சீர்குலைந்த பொருளாதாரப் பிரதிபலிப்பு கிரீஸில் வெகு பயங்கரமாகவே வெளிப்பட்டது.

ஒக்டோபர் 2009இல் கிரீஸ் அரசு வெளியிட்ட ஒரு வாக்குமூலம் உலகெங்கும் அதிர்வலைகளைக் கிளப்பியது. 'பல வருடங்களாகவே நாங்கள் எங்கள் நாட்டின் நிதி நிலைமையை பொய்யாகத் தான் குறிப்பிட்டு வந்திருக்கிறோம். நாங்கள் வெளியிட்டதைவிட எங்கள் நாட்டு 'பட்ஜெட்டில்' பற்றாக்குறை மிக அதிகம்தான்'.

அவ்வளவுதான், கிரீஸுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தவர்கள் யோசிக்கத் தொடங்கிவிட்டார்கள். எச்சரிக்கை மணி பலமாகவே ஒலித்தது. கிரீஸுக்கு கடன் கொடுக்கும் அமைப்புகள் ஒவ்வொன்றாகத் தங்கள் கதவுகளை மூடிக் கொள்ளத் தொடங்கின.

வளரும் நாடுகள் கடன் பெறுவது சகஜம்தான். ஆனால் கிரீஸின் நிதி நெருக்கடி மேலும் கடுமையானது. அது தன் கடன்காரர்களுக்கு செலுத்த வேண்டிய தவணைத் தொகையை செலுத்த முடியாமல் தவிக்கிறது. அடப் பாவமே என்று 'பேஸைத்' திறக்க வேண்டாம்.

கிரீஸின் கடுமையான பொருளாதாரச் சிக்கலை சரி செய்ய மூன்று அமைப்புகள் உதவிக்கரம் நீட்டின. அவை பன்னாட்டு நிதியம், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் ஐரோப்பிய யூனியன். 240 பில்லியன் யூரோக்களை கடனாக இவை அளித்தன.

ஆனால் இவ்வளவு பெரிய தொகையை சும்மாவா கொடுக்கும்? நிபந்தனைகள் விதித்தன. 'உங்கள் நாட்டின் நிதி நிலைமையைச் சரி செய்ய நீங்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். வரி விகிதத்தை மிகவும் அதிகமாக்க வேண்டும். வரி ஏய்ப்பு நிகழாமல் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உங்கள் நாட்டில் ஓய்வு பெறுவதற்கான வயது 57 ஆக இருக்கிறது. இதை மேலும் 10 வருடங்களுக்கு நீடிக்க வேண்டும். இதன் மூலம் வயதானவர்களுக்கு அரசு அளிக்கும் மானியத் தொகையை கணிசமாகக் குறைத்துக் கொள்ளலாம். வெளிநாடுகள் கிரீஸுடன் வணிகம் செய்வதற்கு வசதியான சூழல்களை கிரீஸ் அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்".

எப்படியோ கோடிக்கணக்கான யூரோக்கள் கிரீஸ் நாட்டுக்கு வந்து சேர்ந்தன. பிறகென்ன என்கிறீர்களா? இது சமுத்திரத்தில் கரைத்த உப்புபோல ஆனது. கிரீஸ் நாட்டின் பொருளாதாரம் நான்கில் ஒரு பங்கு வீழ்ச்சி கண்டது. வேலையில்லாத் திண்டாட்டம் என்பது 25 சதவீதம் அதிகமானது.

ஏற்கெனவே ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளிடம் எக்கச்சக்கமாகக் கடன் வாங்கியிருந்தது கிரீஸ். அதற்கான கெடு திகதிகள் ஏற்கெனவே கடந்திருந்தன. இப்படி பிற நாடுகளில் வாங்கிய கடனை (அதாவது கடனில் ஒரு பகுதியை) அடைப்பதற்கே அத்தனை யூரோக் களையும் செலவிட்டது கிரீஸ். பிறகு எப்படி வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணம் கிடைக்கும்?

வேறொரு காரணமும் உண்டு. இடதுசாரி எண்ணங்கள் கொண்டவர் கிரீஸ் நாட்டின் பிரதமர். பொருளாதார மேம்பாடு என்கிற பெயரில் மக்களை கசக்கிப் பிழிய அவருக்கு மனத்தடைகள் இருந்தன. அதைவிட முக்கியமாக இப்படியெல்லாம் செய்தால் அது எதிர்கட்சிகளுக்குச் சாதகம் ஆகிவிடும் என்கிற பயம் வேறு.

கிரீஸ் மக்கள் அதிர்ச்சியின் எல்லைகளைத் தொட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நாட்டின் பணவீக்கத்தால் நொந்துபோய் இருக்கும் அவர்கள் மேலும் என்னென்ன வரிகளைக் கட்ட வேண்டி இருக்குமோ என்ற திகைப்பில் இருக்கிறார்கள்.

ஜூன் மாதமே பன்னாட்டு நிதியத்துக்கு ஒன்றரை பில்லியன் யூரோ தொகையை கிரீஸ் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் கடும் நிதி நெருக்கடி காரணமாக கிரீஸ் இதைச் செய்யவில்லை. தங்களுக்குக் கடன் கொடுத்த அத்தனை அமைப்புகளிடமும், நாடுகளிடமும், கடனைத் திருப்பித் தரும் திகதிகளை மேலும் மேலும் தள்ளிப் போடச் சொன்னார் கிரீஸ் பிரதமர். இரண்டு வருட அவகாசம் கேட்டார்.

ஐரோப்பிய மத்திய வங்கிக்கு இதை ஏற்பதில் சில சிக்கல்கள் உள்ளன.

ஏ.டி.எம்.களில் பணம் பெறவும் கட்டுப்பாடு. மிகவும் குறைந்தபட்சத் தொகையைத்தான் அப்படி எடுத்துக் கொள்ள முடியும் (சுற்றுலாமூலம் கிடைக்கும் வருமானம் குறைந்து விடக்கூடாதென்பதால் வெளிநாட்டு கடன் மற்றும் டெபிட் அட்டைகள் மூலம் மட்டும் இவற்றிலிருந்து பணம் பெற முடியும்).

மக்கள் கதிகலங்கிப் போயிருக்கிறார்கள். ஓய்வூதியத்தைக் கூட பெற முடியாமல் அதிர்ச்சியில் உறைந்தனர்.

ஐயோ பாவம்! கிரீஸ் நாட்டின் பிரதமர் அலெக்ஸிஸ் சிப்ராஸ் இந்த வருடம் ஜனவரி 26 அன்றுதான் பிரதமராக பதவியேற்றார்.

அதற்குள் கிரீஸின் நிலைமை பொருளாதார 'கோமா'வுக்குச் சென்றுவிட்டது. சிவில் பொறியாளரான சிப்ராஸினால் கிரீஸ் என்ற மாபெரும் கட்டடத்தைச் செப்பனிட முடியவில்லை.


கிரீஸ் அரசியலில் தெளிவாக அவர் நுழைந்தது 2006 இல்தான். சிரிஸாவின் ஆதரவில்தான் அவர் உள்ளூர் பிரதேச சபைத் தேர்தல் ஒன்றில் நின்றார், வென்றார். (சிரிஸா என்பது கிரீஸில் உள்ள ஓர் அரசியல் கட்சி. 2004இல் உருவாக்கப்பட்ட இது இடதுசாரி மற்றும் தீவிர இடதுசாரிக் கட்சிகளின் கூட்டு). அவர் போட்டியிட்ட பிரதேச சபை எதென்ஸ்.

சிப்ராஸ் பிரதமரா, அதிபரா என்ற சந்தேகம் நாளிதழ்களைப் படிக்கும் சிலபேருக்கு வந்திருக்கலாம். அவர் பிரதமர்தான். ஆனால் அந்த நாட்டு வழக்கப்படி அவர் 'அரசின் அதிபர்'. எனவே அவரை சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 'மிஸ்டர் பிரசிடென்ட்' என்றுதான் கூப்பிடுவார்கள். மற்றபடி கிரீஸ் நாட்டுக்கு என்று தனியாக ஓர் அதிபரும் உண்டு.

2007இல் நாடாளுமன்றத் தேர்தல் நடை பெற்றபோது சிப்ராஸ் அதில் போட்டியிடவில்லை. " பிரதேச சபை உறுப்பினருக்கான காலகட்டத்தை நான் இன்னும் பூர்த்தி செய்யவில்லை. எனவே இந்தக் கடமையை முடித்துவிட்டுதான் அடுத்த பதவி" என்று அவர் கூறியது பலரையும் கவர்ந்தது.

2015இல் தொடக்கத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார் சிப்ராஸ். இதற்குள் அவர் புகழ் பெற்று, சிரிஸாவின் முக்கியத் தலைவர்களில் ஒருவராகிவிட்டார். இந்தத் தேர்தலில் 149 இடங்களில் அவரது கட்சிக்கு வெற்றி கிடைத்தது. இரண்டு சுயேச்சைகளின் ஆதரவு கிடைத்தது. (நாடாளுமன்றத்தில் மொத்தம் 300 உறுப்பினர்கள்). இதைத் தொடர்ந்து அவர் நாட்டின் பிரதமர் ஆனார். இப்படி மயிரிழையில் அவர் அரசை அமைத்ததால் சில விஷயங்களில் மதில் மேல் பூனையாக நடந்து கொள்ள வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

(வளரும்)



தனது வாழ்க்கைத் துணை பெரிஸ்டெராவுடன் கிரீஸ் பிரதமர் அலெக்ஸிஸ் சிப்ராஸ்.

- தேவராஜன்


# அதிசயத் தீவு!

இந்த உலகில் அதிசயங்களும் விநோதங்களும் ஏராளமாக இருக்கின்றன. அதுபோல உலகில் இன்னமும் விடை தெரியாத புதிர்முடிச்சுகளும் இருக்கின்றன. ஏன், எதற்காக, இப்படி என்று விளக்கம் காண இயலாத மர்மங்களும் இருக்கின்றன. இப்படி விநோதங்களும் மர்மங்களும் கொண்ட ஒரு தீவு இருக்கிறது. அந்தத் தீவில் எங்கு பார்த்தாலும் எல்லாமே வித்தியாசமாக இருக்கின்றன. பார்க்கின்றவை எல்லாம் இதுவரை நம் கண்கள் காணாதவையாகவே உள்ளன என்றால் ஆச்சரியம்தானே! இந்தத் தீவில் காணப்படும் பொருட்கள் எல்லாம் இந்த உலகில் வேறு எங்கும் காணப்படாதவையாக





இருக்கின்றன. இப்படி பல விநோதங்களைக் கொண்ட அந்த தீவின் பெயர் சோகோட்ரா தீவு. இந்த தீவு யெமென் நாட்டின் ஆளுகைக்கு உட்பட்டது. யெமென் தென்மேற்கு ஆசியாவில் உள்ள ஒரு நாடாகும். இது அரேபிய மூவலந்தீவின் தென்மேற்குக் கரையில் அமைந்து உள்ளது. வடக்கில் சவூதி அரேபியாவும் வடகிழக்கில் ஓமானும் எல்லைகளாக அமைந்துள்ளன. தெற்கேயும்





கிழக்கேயும் அரபிக் கடல் அமைந்துள்ளது. வடமேற்கில் செங்கடல் அமைந்துள்ளது இந்தியப் பெருங்கடலில் உள்ள ஒரு புதிரான இடம்தான் இந்த தீவு எனக் கணிக்கப்படுகிறது. இந்தத் தீவு - இந்தியப் பெருங்கடலில் ஆபிரிக்க கொம்பு கடற்கரைக்கு அடுத்து அராபிய தீபகற்பத்திற்கு தெற்கே 190 கடல்வழி மைல்கள் (220 மைல்; 350 கி.மீ) தொலைவில் உள்ள நான்கு தீவுகள் அடங்கிய சிறு தீவுக்கூட்டமாகும். இந்த தீவு கரடுமுரடான பாலைவனம் போலக் காணப்படுகிறது. வறண்ட நிலமாக இருக்கிறது. திட்டு திட்டாக காடுகளும், பாறைகளும் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் மரங்களும், விலங்குகளும் இதுவரை உலகில் எங்கும் காணப்படாத வித்தியாசமான வடிவத்தோடு காணப்படுகின்றன.

இது போன்ற வடிவம் கொண்ட மரங்கள் மற்றும் விலங்குகளை எங்கும் காண முடியாது. அது தான் அந்த தீவின் மர்மத்தின் நுழைவு வாயிலாக இருக்கின்றது!

இந்தத் தீவுகளில் சிற்றினத்தோற்றம் காரணமாக இங்குள்ள தாவரங்களில் மூன்றில் ஒருபங்கு உலகின் பிற பகுதிகளில் காணப்படுவதில்லை. இவை புவிப்பரப்பில் வெளிக்கிரக சூழல் போன்று விளங்கும் இடங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. சிற்றினத்தோற்றம் என்பது ஓர் உயிரினம், தன்னுடைய சுற்றுச்சூழலில் வாழும் பொழுது, தன் தேவைக்கேற்ப ஏற்படும் படிமலர்ச்சி நடைமுறையினால் முற்றிலும் ஒரு புதிய உயிரினமாக உருவெடுத்துத் தோன்றுவதாகும். ஓர் உயிரினத்திலிருந்து, புதியதொரு சிற்றினம் இயற்கையாக நான்கு முறைகளில் தோற்றமடைகிறது. இந்த தீவில் 900 வகை தாவரங்கள், டிராகன் இரத்த மரம் மற்றும் உலகின் வேறு எங்கும் இல்லை என்று அரிதான பறவைகள் சில இருக்கின்றன. புதர் குரோட்டன் மற்றும் வினோதமான மரம், சதைப்பற்றுள்ள மரம், உயரமான குங்கிலியம் மரங்கள், மூன்று ஆண்டு முழுவதும் தோன்றும் சோற்றுக் கற்றாழை, மற்றும் காட்டு மாதுளை இருக்கின்றன. அழகிய மணல் கடற்கரைகள், குகைகள், ட்ரெக்கிங், ஒட்டக சவாரி, பறவை பார்த்தல் மற்றும் கடல் நீச்சல், கண்கவர் புதிய நீர் குளங்கள், அற்புதமான பள்ளத்தாக்குகள், அற்புதமான மணற்குன்றுகள் இத்தீவில் பார்த்து வியக்கத்தக்கவையாக இருக்கின்றன. இந்த தீவில் மட்டும் இருக்கும் உயிரினங்கள் ஏன் இப்படி வித்தியாசமாக இருக்கின்றன? இங்குள்ள மரங்கள் ஏன் வித்தியாசமாக வளர்கின்றன? இந்த இனங்கள் ஏன் உலகில் வேறு எங்கும் காணப்படுவதில்லை போன்ற பல சந்தேகங்கள், கேள்விகள் பல ஆராய்ச்சியாளர்களை ஆராய்ச்சி செய்யத் தூண்டிவருகின்றன. பல ஆய்வுகள் நடக்கின்றன. சுற்றுலா பயணிகள் பலர் இந்தத் தீவுக்கு வருகின்றனர். இந்தத்தீவைப் பார்த்து வியக்கின்றனர். ஆனால், இந்த தீவுக்கு பின் இருக்கும் மர்மங்களுக்குத்தான் விடை தெரியாமலேயே உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது!

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 492 7419

# போதைப்பொருள் விற்பனை; பொருத்தமான தண்டனை

■ போதைவஸ்து, போதையூட்டும் இனிப்பு வகைகள், பாக்குகள் உள்ளிட்ட ஏனைய போதைப்பொருள்களை விற்பனை செய்யும் கடைக்காரர்கள் அனைவரும் உடனடியாக அதனை நிறுத்தவேண்டும்.

■ தவறினால், கடை உரிமையாளர்கள் மட்டுமன்றி, அவற்றில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் சம்பந்தப்பட்டோர் அனைவரும் காலவரையறை இன்றி விளக்கமறியலில் வைக்கப்படுவர்.

■ இந்தப் பெரும் குற்றத்தில் சம்பந்தப்பட்ட கடைகள் சீல் வைத்து மூடப்படும். அந்தக் குற்றத்தை செய்பவர்களின் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும். அவற்றை அரச உடைமையாக்குமாறு நீதிமன்று உத்தரவிடும்.

■ போதைவஸ்துக்களை விற்பனை செய்வோர் மட்டுமன்றி, அவர்களின் பெற்றோரும் கைது செய்யப்படுவர்.

மேற்கண்ட காரசாரமான அறிவுப்புகளை வெளியிட்டு உள்ளார் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் நீதிபதி மா. இளஞ்செழியன்.

போதைவஸ்துக் குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்குமாறு போதைவஸ்துச் சட்டம் பரிந்துரை செய்துள்ளது. ஆகையால் யாழ். மேல் நீதிமன்றம் மிகக் கடுமையான தண்டனை வழங்கும்; அது மிக அவசியமானது - என்றும் நீதிபதி அழுத்திக் கூறியுள்ளார்.

அவை மட்டுமா? போதை வஸ்துக் குற்றங்களில் தமது பிள்ளைகள் ஈடுபடுகிறார்கள் என்று தெரிந்ததும் அவர்களைப் பொலிஸாரிடம் ஒப்படைக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் திருந்தக் கூடும். அவ்வாறு இல்லையெனில், பெற்றோர்களே அவர்களைத் திருத்த வேண்டும்.

தமது பிள்ளைகளை பொலிஸார் கைது செய்யும் வரை, அத்தகையோருக்கு அடைக்கலம் வழங்கிய பெற்றோரும் இனிவரும் காலத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என்றும் நீதிபதி எச்சரித்துள்ளார்.

மொத்தத்தில் அவரது முக்கியத்துவம் கொண்ட தீர்ப்பு, காலத்தின் தேவை, உடனடித்தேவை; தவிர்க்க இயலாததும் ஆகும்.

கொலை, கொள்ளை மற்றும் சமூகப் பாதிப்பைத் தரும் குற்றச் செயல்களில் ஈடுபடத் தூண்டும் போதைப் பொருள்கள் சமூகத்தை, மிகக்குறிப்பாக, எதிர்காலச் சந்ததியினரான இளைஞர்களை நாசமாக்குகின்றன.

ஆகையால் போதைவஸ்து குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்குவது காலத்தின் மிகப் பெரும் தேவை.

யாழ். மேல் நீதிமன்றம் விடுத்த எச்சரிக்கையை மக்கள் நலன் விரும்பும் அனைவரும் வரவேற்பர்.

கடந்த கால ஆட்சியில் இளைஞர்களிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் பலவற்றில், வெற்றிபெறும் வீரர்களுக்கு, போதை ஊட்டும் "ஸ்ரோங் பியர்" போன்ற பானங்கள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டமை ஒன்றும் இரகசியமே அல்ல. சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய சாராரே அதற்குத் துணை போனதும் உண்டு.

அந்தப் பாதக நிலை மேலுயராமல், தடுக்கும் யாழ். மேல்நீதிமன்றத் தீர்ப்புப் போன்று -

எமது பிரதேசங்களின் இளைஞர்களை ஒவ்வா வழிகளில் ஈடுபடாது தடுக்க, தவிர்க்கக் காட்டமான சட்ட விதிகள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புக்கள் தேவை.

இதுவரை பொருளாதாரத் தடையால் மேற்காசியப் பிரதேசத்தில் சற்று அடக்கி வாசித்துக் கொண்டிருந்த ஈரான் இனி மேல் ஸ்தாயில் வாசிக்குமா என்ற கேள்வி உலக அரங்கில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ஈரானின் உச்சத் தலைவர் அயத்துல்லா அலி கொமெய்னி அமெரிக்காவுடன் யூரேனியப் பதப்படுத்தல் உடன் படிக்கையின் பின்னர் அமெரிக்கா தொடர்பான ஈரானின் நிலைப்பாட்டில் மாற்ற மில்லை

### ஹோமஸ் நீரிணை

ஈரானின் பூகோள இருப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. கடல் மூலமான உலக எரிபொருள் வழங்கலில் 40% ஈரானின் ஹொமஸ் நீரிணையூடாக நடக்கிறது. உலக மொத்த எண்ணை வழங்கலில் இது 20% ஆகும். ஹோமஸ் நீரிணை ஓமான் வளைகுடாவையும் பாராசீக வளைகுடாவையும் இணைக்கும் 35மைல்கள் நீளமுள்ள நீரிணையாகும். நாளொன்றிற்கு 15 எண்ணை தாங்கிக் கப்பல்கள் இதனூடாக பயணம் செய்கின்றன. சவுதி அரேபியா,

# அரபு நாடுகளில் ஈரானின் ஆதிக்கம்

என்றார். ஈராக்கில் சதாம் ஹுசேயினின் ஆட்சியை ஒழித்ததன் மூலம் அமெரிக்கா ஈரானை வலுவடையச் செய்து விட்டது என்பது சுனி முஸ்லிம்களின் குற்றச்சாட்டாக இருக்கின்றது.

### வரலாற்றில் ஒரு வல்லரசு

ஈரானுக்கு என்று உயரிய வரலாற்றுப் பெருமை இருக்கின்றது. பாரசீகம் (Persia) என அதை ரோமர்கள் அழைத்தனர். எகிப்து முதல் துருக்கி, மெசப்பதோனியா ஆகியவை உள்ளிட்ட அதனது பேரரசு சிந்து நதிவரை வியாபித்திருந்தது. பின்பு அவர்கள் கிரேக்கர், ரோமர், அரபுக்கள், துருக்கியர், மங்கோலியர் ஆகியோரால் ஆக்கிரமிக்கப்

ஈராக், குவைத், பாரெய்ன், கட்டார், துபாய், போன்ற நாடுகளில் இருந்து ஏற்றுமதியாகும் எரிபொருள் ஹோமஸ் நீரிணையூடாகவே நடக்கின்றது. இந்த நீரிணையை மூடிவிடுவேன் என்று ஈரான் அடிக்கடி மிரட்டுவதுண்டு. அமெரிக்கா இந்த நீரிணையை தனது கடற்படையின் கண்காணிப்பின் கீழ் வைத்திருக்கின்றது. அமெரிக்காவின் மேற்காசிய நகர்வுகளுக்கு என்றும் பிரச்சனையாகவும் சவாலாகவும் இருப்பது ஈரானே.

### ஈரானின் பிராந்திய ஆதிக்கக் கனவு

2015 மார்ச் மாதம் ஈரானின் அதிபர் ஹஸன் ரௌஹானியின் ஆலோசகர் அலி யூனிசி ஈரான் ஒரு பேரரசு, ஈராக் அந்தப் பேரரசின் ஒரு பகுதி என்றார். அதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் ஈரானிய புரட்சிப் படையான கட்ஸ் படையின்




பட்டனர். மீண்டும் எகிப்து, அல்ஜீரியா, லிபியா, ஈராக், சவுதி அரேபியாவின் ஒரு பகுதி ஆகியவற்றைக் கொண்ட ஒரு வல்லரசாக தாம் உருவாக வேண்டும் என தற்போதைய ஈரானின் மதவாத ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். இப்பிரதேசங்களைத் தமது ஆட்சிக்குள் கொண்டு வந்து அங்கு சியா முறைமையிலான இஸ்லாமைப் பரப்ப வேண்டும் என்பது அவர்களது கனவு.

வெளிநாட்டுப் பிரிவின் தளபதி காசிம் சுலைமான் இன்று ஈரான் தனது மதப் புரட்சியை பாஹ்ரேன் முதல் ஈராக் வரைக்கும், சிரியா முதல் யேமன் உள்ளிட்ட வட ஆபிரிக்காவரைக்கும் ஏற்றுமதி செய்யக் கூடிய நிலை உருவாகியுள்ளது என்றார். இவை மட்டுமல்ல 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஈரானிய உயர் தலைவர் அலி கொமெய்னிக்கு நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினர்




அல் ரெஜா ஜக்கானி தற்போது பாக்தாத், பெய்ரூட், டமஸ்கஸ், சனா ஆகிய நான்கு அரபுத் தலைநகரங்கள் ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றார். இன்னும் சற்றுப் பின் சென்றால் 2013ஆம் ஆண்டு அஜர்பைஜானை ஈரானுடன் மீளிணைக்க வேண்டும் என்ற தீர்மானம் ஈரானியப் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அஜர்பைஜானை சோவியத் ஒன்றியம் ஓர் உடன்படிக்கை மூலம் ஈரானிடமிருந்து 1828ஆம் ஆண்டு பிரித்து தன்னுடன் இணைத்துக் கொண்டது.

**அரபுக்கள் வேறு ஈரானியர்கள் வேறு**

ஈரானியர்களும் அரபுக்களும் மதத்தால் ஒன்றுபட்டிருந்தாலும் இனத்தால் மொழியால் வேறு பட்டவர்கள். மதத்தால் ஒன்று பட்டவர்கள் என்று அழுத்திச் சொல்ல முடியாத அளவிற்கு சியா முஸ்லிம்களான ஈரானியர் களுக்கும் சுனி முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பல அரபு நாடுகளும் முரண்பட்டுக் கொள்கின்றன. சுனி முஸ்லிம்களைக் கொண்ட துருக்கி ஈரானுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி வந்தாலும் சிரியா விவகாரத்தில் இரண்டும் முரண்படுகின்றன. குர்திஷ் மக்களை ஒழிப்பதில் இரு நாடுகளும் ஒத்துழைக்கின்றன.

**ஈராக் சியா ஆனால் அரபு**

ஈராக்கில் சுனி இஸ்லாமிய அமைப்பான ஐ எஸ் ஐ எஸ் என்றும் ஐ எஸ் ஐ எல் என்றும் ஐ எஸ் என்றும் அழைக்கப்படும் இஸ்லாமிய அரசுக்கு எதிராக ஈரானே முன்னணியில் நின்று செயற்படுகின்றது. சியா முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈராக்கில் சுனி முஸ்லிம் ஆன சதாம் ஹுசைன் நீண்டகாலம் ஆட்சியில் இருந்தார். அவர் ஈரானுக்கு எதிராக நீண்ட போரையும் 1980இல் இருந்து 1988 வரை நடாத்தினார். அவரது பிராந்திய ஆதிக்கக் கனவால் அவர் அமெரிக்க ஆக்கிரமிப்பால் ஆட்சியில் இருந்து விரட்டப்பட்டுக் கொல்லப்பட்டார். பின்னர் அமெரிக்க ஆதரவுடன் தேர்தல் மூலம் ஈராக்கில் சியா முஸ்லிம்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். இதைத் தொடர்ந்து ஈராக்கில் உள்ள சுனி முஸ்லிம்களின் அமைப்பான ஈராக்கிற்கான அல் கெய்தா ஐ எஸ் என்னும் போராளி அமைப்பாக மாறியது. சுனிப் போராளிகளும், சதாமின் படையில் இருந்த பாத் கட்சி வீரர்களும் ஐ எஸ்ஸுடன் இணைந்து கொண்டனர். ஐ எஸ் அமைப்பு சுனி முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சிரியாவில் சியா முஸ்லிம்களின் ஒரு பிரிவினரான அலவைற் இனக்குழுமத்தினரின் ஆட்சிக்கு எதிராகப் போராடுவதாகச் சொல்லி சவுதி அரேபியா, கட்டார் ஆகிய நாட்டுச் செல்வந்தர்களிடமிருந்து பெரும் நிதியைப் பெற்றுக் கொண்டு ஈராக்கிலும் சிரியாவிலும் பெரு நிலப்பரப்பைக் கைப்பற்றிக் கொண்டது. அமெரிக்காவின் முதலாம் எதிரியாக ஐ எஸ் அமைப்பு வளர்ந்து வருகின்றது. இந்த ஐ எஸ் அமைப்பை ஒழித்துக் கட்ட அமெரிக்காவும் விரும்புகின்றது ஈரானும் விரும்புகின்றது. இதனால் அமெரிக்காவும் ஈரானும் ஈராக்கில் இணைந்து செயற்படுகின்றன.

**சவுதி அரேபியா**

ஈரானின் பிராந்திய ஆதிக்கத்திற்கு பெரும் சவால் விடும் நாடாக சவுதி அரேபியா இருக்கின்றது. சவுதியில் சியா முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களை தன்னுடன் இணைக்க வேண்டும் எனவும் ஈரான் கருதுகின்றது. ஈரானின் நிகராளிகளில்(Proxies) ஒன்றான ஹமாஸ் அமைப்பை சவுதி அரேபியா தனது பக்கம் இழுத்துக் கொண்டிருக்கின்றது. ஹமாஸ் அரசியற் துறைப் பொறுப்பாளர் கலீட் மேஷாலும் மற்றும் பல உயர் மட்டத்தினரும் 2015 ஜூலை மாதம் சவுதி அரேபியாவிற்குப் பயணம் மேற்கொண்டது ஈரானை உலுப்பியதுடன் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. இது வரைகாலமும் ஹமாஸ் அமைப்பிற்குத் தேவையான படைக்கலன்களும் நிதியும் ஈரானிடமிருந்தே கிடைத்தன. சவுதி அரேபியாவுடன் உறவை வளர்த்தால் அதன் மூலம் எகிப்திய அரசு மூடி வைத்திருக்கும் ரஃபாக் கடவையைத் திறக்க வைக்கலாம் எனக் ஹமாஸ் அமைப்பு நம்புகின்றது. ஈரான் அணுக்குண்டு தயாரித்தால் பாகிஸ்த்தனிடமிருந்து அணுக்குண்டை வாங்கும் திட்டத்துடன் சவுதி அரேபியா இருக்கின்றது.

**லெபனான்**

முதலாம் உலகப் போரின் பின்னர் மேற்காசியாவில் ஒரு கிறிஸ்த்தவ நாடு தேவை என லெபனான் உருவாக்கப்பட்டது. ஆனால், காலப்போக்கில் அங்கு இஸ்லாமியரே பெரும்பான்மையாகிவிட்டனர். பலஸ்த்தீனத்தில் இருந்து இடம்பெயர்ந்தோராலும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தும் இஸ்ரேலாலும் லெபனான் குழப்பம் மிக்க நாடாக இருக்கின்றது. லெபனானில் இருந்து யஸீர் அரபாத் தலைமையிலான பலஸ்த்தீன விடுதலை இயக்கத்தை சிரியா படையெடுத்து விரட்டியதன் பின்னர் அங்குள்ள எஞ்சிய பலஸ்த்தீனியர்களால் இஸ்ரேலின் அட்டூழியத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட ஹிஸ்புல்லா அமைப்பு மத்திய தரைக் கடலில் உள்ள ஈரானின் விமானம் தாங்கிக் கப்பல் என விமர்சிக்கப்படுகின்றது. ஹிஸ்புல்லா அமைப்பிற்கு படைக்கலன்களும் நிதியும் வழங்கும் ஈரான் தனது பிராந்திய ஆதிக்கத்தை லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா மூலம் முன்னெடுத்து வருகின்றது.

**சிரியா**

சிரியாவில் சுனி ஐ எஸ் அமைப்பும் சிரிய அதிபர் அல் பஷார் அசாத்திற்கு எதிரான சுனிக் கிளர்ச்சிக்காரர்களும் ஒரு தரப்பினருடன் மற்றத் தரப்பினர் போராடி அழிந்து கொள்வது ஈரானிற்கு மகிழ்ச்சியூட்டும் ஒன்று. லெபனானின் செயற்படும் சியா முஸ்லிம் தீவிரவாத அமைப்பான ஹிஸ்புல்லாவிற்கான விநியோகம் ஈரானில் இருந்து சிரியாவின் விமான நிலையங்களூடாக நடை பெறுகின்றது. இதனால் சிரியா ஈரானைப் பொறுத்தவரை முக்கியமான ஒரு நாடாகும். அதிபர் பஷாத்தைப் பாதுகாக்க ஈரான் பணம், படைக்கலன் ஆகியவற்றை வழங்குவதுடன் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாப் போராளிகளை அசாதின் படைகளுடன் இணைந்து கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராகப் போராட வைக்கின்றது. ஈராக்கும் சிரியாவும் ஈரானின் ஆதிக்கத்திற்குள் வந்தால் அடுத்ததாக் லெபனான் இலகுவாக ஈரானின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும். ஈரானும் சிரியாவும் லெபனானுடனான எல்லையை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றன.

**ஐக்கிய அமீரகம்**

ஈரானுக்கும் ஐக்கிய அமீரகத்திற்கும் இடையில். ஹோமஸ் நீரிணையில் உள்ள Greater Tunb, Lesser Tunb, Abu Musa ஆகிய மூன்று தீவுகளும் யாருக்குச் சொந்தம் என்பது தொடர்பாக முறுகல் நிலை

(22ஆம் பக்கம் பார்க்க)



# தாஜுதீன் கொலை நீதி கிடைக்குமா?

பரிதாபகரமாக உயிரிழந்த பிரபல றக்பி வீரர் வஸீம் தாஜுதீனின் மரணத்தில் மறைந்துள்ள மர்மங்கள் வெளிக்கொணரப்பட்டு, குற்றவாளிகள் யாராகவிருந்தாலும் அவர்களுடைய முகத்திரைகள் கிழிக்கப்பட்டு நீதி நிலை நாட்டப்படுமா?

றக்பி வீரர் வஸீம் தாஜுதீன் ஒரு சிறந்த விளையாட்டு வீரர் மட்டுமல்ல. ஒரு சிறந்த மனித நேயமுள்ள மனிதரும் கூட. அவர் எல்லோரிடமும் சஜகமாக பழகுபவர்.

தனது தாய் நாட்டுக்காக முன்னின்று விளையாடும் ஒரு சிறந்த விளையாட்டு வீரராகவிருந்தார். 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 ஆம் ஆண்டு வரை கல்கிசை புனித தோமஸ் கல்லூரியின் றக்பி குழுவில் இடம்பெற்றிருந்த தாஜுதீன் ஹெவ்லொக் ஸ்போர்ட்ஸ் றக்பி குழுவில் இணைந்துகொண்டதுடன், தனது திறமையின் காரணமாக 2009 ஆம் ஆண்டு 'ஹெவ்லொக் ஸ்போர்ட்ஸ்' குழுவின் தலைவராக கடமையாற்றும் சந்தர்ப்பமும் அவருக்கு கிடைத்தது.

சிறந்த தலைமைத்துவமும், குழுவினை வழிநடத்தும் ஆளுமையும் இயல்பாகவே அவரிடம் இருந்தது. தாஜுதீனுக்கு காலில் உபாதையொன்றும் ஏற்பட்டிருந்தது. இதனால் சிறிது காலம் றக்பி விளையாட்டிலிருந்தும் ஓய்வு பெற்றிருந்தார்.

அவருடைய இழப்பானது இலங்கை விளையாட்டு துறைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

இது பிரபல றக்பி வீரர் வஸீம் தாஜுதீனின் மரணம் தொடர்பாக அவரது பயிற்றுவிப்பாளர் சில ஆண்டுகளுக்கு முன் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்தாகும்.

இன்று அனைவர் மத்தியிலும் கடந்த 3 வருடங்களுக்கு முன் பரிதாபகரமாக உயிரிழந்த பிரபல றக்பி வீரர் வஸீம் தாஜுதீன் மரணத்தில் மறைந்துள்ள மர்மங்கள் வெளிக்கொணரப்பட்டு, குற்றவாளிகள் யாராகவிருந்தாலும் அவர்களுடைய முகத்திரைகள் கிழிக்கப்பட்டு நீதி நிலை நாட்டப்படுமா? என்ற கேள்வியே எழுந்துள்ளது.

இந்த நிலையில் வஸீம் தாஜுதீன் மரணம் தொடர்பான விசாரணைகளை கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் துரிதமாக முன்னெடுத்து வருகின்றார்கள்.

2012 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் சாலிகா விளையாட்டு மைதானத்தை அண்மித்த பகுதியில் எரிந்த நிலையில் காணப்பட்ட கார் ஒன்றிலிருந்து தாஜுதீனுடைய சடலம் மீட்கப்பட்டது.



**- வசந்தா அருள்ரட்ணம்**

எனினும், அதி வேகத்தில் வந்த கார் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமை காரணமாக மதில் மீது மோதியதில் தீப் பற்றி விபத்துக்குள்ளாகியுள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

இதனையடுத்து சடலமானது குடும்பத்தவரிடம் ஒப்படைக்கப்பட்டு தெஹிவளை ஜும் ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஆனால், வஸீம் தாஜுதீனின் மரணம் ஒரு விபத்து அல்ல. அது ஒரு கொலையாக இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து அது குறித்த வாதப்பிரதி வாதங்கள் ஏற்பட்டன. இந்த நிலையில் அது குறித்த விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றன.

இறுதியாக குற்றத்தடுப்பு பிரிவினர் கொழும்பு நீதிமன்ற நீதவான் நிசாந்த பீரிஸுக்கு சாட்சியங்களைச் சமர்ப்பித்திருந்ததை தொடர்ந்தே இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வஸீம் தாஜுதீனின் கழுத்துப்பகுதியில் கூரிய ஆயுதத்தினால் குத்தப்பட்டு, தட்டையான ஆயுதம் ஒன்றால் அவர் தாக்கப்பட்டு, முதுகெலும்பு, பற்கள், கைகால்களும் உடைக்கப்பட்டுள்ளதுடன், பாதமானது கண்ணாடியை ஒத்த கூரிய ஆயுதத்தால் கிழிக்கப்பட்டு எலும்புகள் முறிக்கப்பட்டு பலத்த சித்திரவதைகளுக்குட்படுத்தப்பட்டே அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்தே பல்வேறு கோணங்களில் தாஜுதீன் மரணம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தாஜுதீன் 2009 ஜூலை 'கால்டெக்ஸ் ஒப்சர்வர்' விருதுகளில் (Caltex Observer Rugby Awards) சிறந்த றக்பி வீரர் விருதை (Most Popular Rugby Player) வென்றார்.

அதன்பின் காலில் ஏற்பட்ட உபாதையொன்றின் காரணமாக சிறிது காலம் றக்பி விளையாட்டிலிருந்தும் ஓய்வு பெற்றிருந்தார்.

அதுமட்டுமின்றி அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் சுற்றுலாத் துறையிலும் சிறிதுகாலம் (Mackios America Express Travel) பணியாற்றினார்.

2012 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி மாலை 6 மணியளவில் நண்பர் ஒருவரின் வீட்டுக்கு விருந்துக்காக செல்வதாக கூறிச் சென்ற தாஜுதீன் தொடர்பாக மறுநாள் காலை சோக செய்தியொன்றே அனைவர் காதுகளுக்கும் எட்டியது.

வஸீம் தாஜுதீன் பயணித்த கார் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமை காரணமாக நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் சாலிகா விளையாட்டு மைதானத்தை அண்மித்த பகுதியிலுள்ள மதிலில் மோதி தீப்பற்றி விபத்துக்குள்ளாகியதில் தாஜுதீன் உயிரிழந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

காரில் கண்டெடுக்கப்பட்ட சடலம் ஆரம்பத்தில் தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றும் முகாமையாளருடையது என்றே கூறப்பட்டது.

எனினும், பின்னர்தான் அது பிரபல றக்பி வீரர் வஸீம் தாஜுதீனின் சடலம் என இனங்காணப்பட்டது.

இருப்பினும், தாஜுதீனின் மரணம் தொடர்பாக ஆரம்பத்தில் எந்த விதமான விசாரணைகளும், முறையாக மேற்கொள்ளப்படவில்லை.

அப்போது இது ஒரு விபத்து காரணமாக ஏற்பட்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

# உக்ரேனில் அமெரிக்கா அதிர்ச்சியில் ரஷ்யா




உக்ரேனியப் படைகளுக்கு பயிற்சி அளிக்க அங்கு சென்றுள்ள ஐக்கிய அமெரிக்கப் படைகளால் ரஷ்யா அதிர்ச்சியடைந்துள்ளது. உக்ரேனின் கிறிமியாவை தன்னுடன் இணைத்த ரஷ்யா உக்ரேனின் ரஷ்யர்கள் பெரும்பான்மையினராக வாழும் அதன் கிழக்குப் பிராந்தியத்தில் பெரும் கிளர்ச்சியைத் தூண்டியுள்ளது. அவர்கள் தமக்கு தனிநாடு கோரிப் போராடுகின்றார்கள். உக்ரேனுக்குள் ரஷ்யா தனது படையினர் பலரை இரகசியமாக அனுப்பி உக்ரேனியப் படைகளுடன் சண்டை செய்ய வைத்துள்ளது.

**ஒத்துழைக்காமை**

சிரிய விவகாரத்தில் ஐக்கிய அமெரிக்காவுடன் ரஷ்யா ஒத்துழைக்காததால் அமெரிக்கா உக்ரேனில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி உக்ரேனை ரஷ்யாவிற்கு எதிராகத் திருப்பியது. அதனால் உக்ரேன் ரஷ்யாவின் 'யூரோ ஏசியன்' பொருளாதாரக் கூட்டமைப்பில் இணையாமல் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய முனைந்தது. இதனால் ஆத்திரமடைந்த ரஷ்யா உக்ரேனில் வாழும் ரஷ்யர்களை உக்ரேனிய அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழச் செய்தது. முன்பு ரஷ்யாவின் ஒரு பகுதியாக இருந்தும் ரஷ்யாவிற்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்படைத் தளத்தைக் கொண்டதுமான கிறிமியாவில் குழப்பம் உருவானது. கிறிமியாவில் ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தி அது ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ரஷ்யாவிற்கு எதிராக நேட்டோ நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்தன.

**இரசியாவின் தளரும் பொருளாதாரம்**

ரஷ்யாவிற்கு எதிரான பொருளாதாரத் தடையும் உலகச் சந்தையில் வீழ்ச்சியுறும் எரிபொருள் விலை வீழ்ச்சியும் அதன் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. தொடர்ந்து இரண்டு காலாண்டுகள் ரஷ்யாவின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த படியால் ரஷ்யப் பொருளாதாரம் கோட்பாட்டு ரீதியாக மந்த நிலையை அடைந்துள்ளது என்பது உறுதியாகிவிட்டது. 2015ஆம் ஆண்டிற்கான முதலாம் காலாண்டில் 2.2 வீதம் வீழ்ச்சியைக் கண்டிருந்தது. இரண்டாம் காலாண்டில் ரஷ்யப் பொருளாதாரம் 4.6 வீதம் வீழ்ச்சியை அடைந்ததுடன் அங்குவிலைவாசி 15.6 வீதமாக இருக்கின்றது. இரண்டாம் காலாண்டிற்கான வீழ்ச்சி எதிர்பார்த்த 4.5 வீதத்திலும் அதிகமாகும். 2015 ஜூலை வரையிலான 12 மாதங்களில் ரஷ்ய நாணயம் அமெரிக்க டொலர்களுக்கு எதிராக 43 விழுக்காடு வீழ்ச்சியடைந்தது.

**ரஷ்யாவின் படை இரகசியம் கை மாறுமா?**

உக்ரேனில் கிளர்ச்சி செய்பவர்களுக்கும் உக்ரேனுக்குள் இரகசியமாக நுழைந்த ரஷ்யப் படையினருக்கும் எதிராகப் போர் புரியும் உக்ரேனியப் படைகளுக்கு ஐக்கிய அமெரிக்கப் படைகள் போர்ப்பயிற்சிகள் வழங்குகின்றன. முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் ஒரு உறுப்பு நாடாக இருந்த படியால் உக்ரேனியப் படையினர் ரஷ்யாவின் போர் முறைகளைப் பற்றி நன்கு அறிந்தவர்கள். அத்துடன் ரஷ்யப் படைகள் எப்படிப் போர் புரிகின்றன என்பது பற்றி தற்போது உக்ரேனியப்படைகள் அறிந்து கொள்கின்றன. உக்ரேனியப் படைகளிடமிருந்து அமெரிக்கப் படைகள் இத் தகவல்களைப் பெற்றுக் கொள்வது பற்றி ரஷ்யா கலவரமடைந்துள்ளது.

> ❝ ரிய விவகாரத்தில் ஐக்கிய அமெரிக்காவுடன் ரஷ்யா ஒத்துழைக்காததால் அமெரிக்கா உக்ரேனில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி உக்ரேனை ரஷ்யாவிற்கு எதிராகத் திருப்பியது. அதனால் உக்ரேன் ரஷ்யாவின் 'யூரோ ஏசியன்' பொருளாதாரக் கூட்டமைப்பில் இணையாமல் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய முனைந்தது. இதனால் ஆத்திரமடைந்த ரஷ்யா உக்ரேனில் வாழும் ரஷ்யர்களை உக்ரேனிய அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழச் செய்தது. ❞

**போர் ஒத்திகை**

ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, போலாந்து ஆகிய நாட்டுப் படைகள் உட்படப் பல நேட்டோப் படையினர் உக்ரேனியப் படைகளுடன் இணைந்து 2015ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டதும் ரஷ்யாவைக் கரிசனை கொள்ள வைத்துள்ளது. இந்தப் போர்ப் பயிற்சி தேவை ஏற்படின் அவர்கள் ரஷ்யாவுடன் மோதலுக்குத் தயார் என்பதை உணர்த்துவதாக அமைந்திருந்தது. இப்பயிற்சியில் 19 நாடுகளில் இருந்து 15,000 படையினர் ஈடுபட்டனர். ஒரு பயிற்சியில் ஊடகத் தரையிறக்கம் செய்யப்பட்டது. இன்னும் ஒரு பயிற்சியில் 'போல்ரிக்' நாடுகளிலும் போலாந்திலும் தாங்கிகள் தாழப் பறக்கும் விமானங்களுடன் பயிற்சிகள் நடந்தன. மூன்றவது பயிற்சியில் நேட்டோ புதிதாக உருவாக்கிய அதி துரித தயார் நிலை அதிரடிப் படையினர் போலாந்தில் பயிற்சியில் ஈடுபட்டனர். பதிலுக்கு ரஷ்யப் படையினர் லத்வியாவை ஆக்கிரமிப்பது போன்ற ஒரு பயிற்சியில் ஈடுபட்டனர். ரஷ்யாவின் பயிற்சியில் எண்பதினாயிரம் படையினர் ஈடுபட்டனர். நேட்டோப் படைகள் தேவை ஏற்படின் உக்ரேனின் படை நிலைகளையும் படைத்துறைக் களஞ்சியங்களையும் பாவிக்க உக்ரேன் அனுமதி வழங்கியுள்ளது.

**பாதுகாப்புச்சபையில் தனித்த புட்டீன்**

2015 ஜூலை மாதம் 3ஆம் திகதி ரஷ்யாவின் பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெற்றது. பத்துப் பேரைக் கொண்ட ரஷ்யப் பாதுகாப்புச் சபையில் ரஷ்ய அதிபர் விளடிமீர் புட்டின் மட்டுமே தனது நாட்டுப் படைகள் தனது ஆணையை ஏற்றுப் நேட்டோப் படைகளுடன் போர் புரியும் என நம்புகின்றார். ஐக்கிய அமெரிக்கா ரஷ்யாவை ஆக்கிரமிக்க முயல்கின்றது என புட்டீன் உறுதியாக நம்புகின்றார். நேட்டோப் படைகளுடன் ஒரு போருக்கு அவர் தயார் என்கின்றார். ரஷ்யாவின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின் பின்னர் மொஸ்க்கோவின் எதிரொலி என்ற வானொலி எடுத்த கருத்துக் கணிப்பில் ரஷ்யாவிற்கும் நேட்டோவிற்கும் இடையில் நேரடி மோதல் நடக்கும் என 43 வீதத்தினர் பதிலளித்துள்ளனர். இதுவரை வட அமெரிக்க மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளை எமது மேற்கத்தையப் பங்காளிகள் என குறிப்பிட்டு வந்த புட்டீன் இப்போது அவர்களை எமது புவிசார் அரசியல் எதிரிகள் எனக் குறிப்பிடத் தொடங்கியிருக்கின்றார் என்பதை அரசியல் நோக்குனர்கள் கவனமாகக் கருத்தில் கொண்டுள்ளனர்.

**போர் அபாயம்**

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் கேஜீபி அதிகாரியுமான கென்னடி குட்கோவ் உக்ரேனில் நிலைமைகள் மோசமடைந்து இரசியப் படைகளுக்கும் நேட்டோ ஆதரவுப் படைகளுக்கும் இடையிலான ஒரு மோதல் சாத்தியமான ஒன்று என்றார். பிரித்தானியாவில் உள்ள போர் தொடர்பான சிந்தனையாளர் குழு, நடக்கும் ஒத்திகைகள் போர் அபாயத்தை அதிகரித்துள்ளதுஎன்கின்றது.



வேணு சீனிவாசன்

# உங்கள் குழந்தைகள் உங்களை விரும்ப வேண்டுமா?

உங்கள் குழந்தைகள் உங்களை விரும்ப வேண்டும் என்று உங்கள் மனத்திற்குள் ஆயிரம் எண்ணங்கள் ஓடிக் கொண்டிருக்கும். இதற்காக நீங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழிக்க வேண்டாம். இதனைப் படித்துப் பாருங்கள்.

எட்டாம் வகுப்பில் படிக்கின்ற விமலா பேச்சுப்போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசும் பெறுகிறாள். தன் வெற்றியை பகிர்ந்து கொள்ளவும், பாராட்டுக்களை கேட்கவும் அவரசமாக வீட்டிற்கு ஓடி வருகிறாள்.

வீட்டில் விமலாவின் பெற்றோர் இருக்கின்றனர். அம்மா, சமையல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டு இருக்கும் போது விமலா உள்ளே நுழைகிறாள்.

"அம்மா அம்மா இதோ பாருங்க, எனக்கு முதல் பரிசு கிடைச்சிருக்கு" என்று கத்திக் கொண்டே வந்து அம்மாவை கட்டிக் கொள்கிறாள்.

"என்ன பரிசு?" என்கிறார் அப்பா, ஷேவ் செய்து கொண்டே.

"இதோ இந்தப் பொம்மை" என்று பெருமை பொங்க தன் கையில் இருக்கும் பொம்மையைக் காட்டுகிறாள் விமலா.

"போயும் போயும் இந்தப் பொம்மைக்கா நீ இத்தனை நாள் கஷ்டப்பட்டாய், வெட்டி வேலை" என்கிறார் அப்பா, கிண்டலான சிரிப்போடு.

இதனோட விலை பத்து ரூபா இருக்குமா? இது மாதிரி எங்கிட்ட பத்து இருக்கு, இதுவா முதல் பரிசுக்கு கொடுப்பாங்க என்கிறாள் அம்மா.

விமலாவின் திறமை, உழைப்பு, ஆர்வம், விடாமுயற்சி, போட்டியில் பெற்ற வெற்றி ஆகிய எதுவுமே பெற்றோர்களின் கண்ணுக்குத் தெரியவில்லை. அவர்களுக்குத் தெரிந்தது எல்லாம் முதல் பரிசுக்காக கொடுக்கப்பட்ட பொருளின் விலை மட்டுமே. பாசத்தையும், பாராட்டையும் எதிர்பார்த்த விமலாவின் பிஞ்சு நெஞ்சம் நொறுங்கும்; சத்தம் உங்களுக்குக் கேட்கிறதா?

> **"குழந்தையின் வெற்றியில் உங்களுக்குப் பங்கு இருப்பதை சுட்டிக் காட்டாதீர்கள். அதற்காக பழி தீர்த்துக் கொள்ளுவதைப் போல அந்த வெற்றியை குறைத்து மதிப்பிடாதீர்கள். வெற்றியின் விலையை பரிசுப் பொருளின் விலையை வைத்து எடை போடாதீர்கள். குழந்தைகளின் சந்தோஷத்தை, திறமையைப் பணத்தை அளவு கோலாகக் கொண்டு கணிப்பது மிகவும் தவறான செயல். எனவே அந்த வெற்றியைப் பாராட்டுங்கள். குழந்தை உங்களை மிகவும் விரும்புவார்கள். ஏனென்றால் நீங்கள் எதைக் கொடுக்கிறீர்களோ அதுவே திரும்பவும் கிடைக்கும் என்பதே இயற்கை விதி. இதனை மதித்து நடக்கும் பெற்றோர்களுக்கு குழந்தைகளிடையே அன்பும், பாசமும் பெருகுவது நிச்சயம்."**

விமலாவின் பெற்றோரைப் போல நடந்து கொள்வது மிகவும் தவறு. நமது குழந்தை பெற்ற வெற்றிதான் முக்கியமே தவிர, பரிசுப் பொருளின் விலை முக்கியம் அல்ல. அது போல பல பொம்மைகள் ஒவ்வொருவரின் வீட்டிலும் இருக்கும். ஆனால் அவை காசு கொடுத்து வாங்கியவையே தவிர, வெற்றி பெற்று ஈட்டியவை அல்ல. பலமுனைப் போட்டியைச் சமாளித்து பரிசு வாங்கி வரும் குழந்தையைக் கொண்டாட வேண்டும், பாராட்ட வேண்டும், பலரிடமும் சொல்லி பெருமைப்பட வேண்டும். இதையே குழந்தைகள் பெற்றோரிடம் எதிர்பார்க்கிறார்கள். இவ்வாறு நடந்து கொள்ளும் பெற்றோரையே குழந்தைகள் பெரிதும் விரும்புகின்றனர்.

இப்போது சொல்லுங்கள் நீங்கள் இப்படி நடந்து கொள்ள விரும்புகிறீர்களா? உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ளுங்கள். வெற்றி பெற்று வரும் குழந்தையை பாராட்டுங்கள். சற்று அளவிற்கு அதிகமாகவே இருந்தாலும் கவலையில்லை. அது உங்கள் குழந்தைதானே.

இது என்ன பெரிய வெற்றி? உனக்கு நான் எழுதிக் கொடுத்தேன். அப்பா பக்கத்திலே இருந்து பலமுறை படிக்க வைத்தார். அப்படியும் ஜெயிக்கலைன்னா நீ தண்டம், மகா மக்கு என்ற ரீதியில் குழந்தைகளிடம் பேசாதீர்கள். நீங்கள் எழுதிக் கொடுத்தது சரிதான், உங்கள் குழந்தைக்கு நீங்களே முயற்சி எடுக்காத போது, வேறு யார் முன் வந்து உதவி செய்வார்கள். ஆகவே அதை சொல்லிக் காட்டுவது சரியல்ல. இவ்வாறு நீங்கள் உடன் இருந்து உழைத்தும் உங்கள் குழந்தைக்கு வெற்றி கிடைக்காவிட்டால்? என்ன ஆகியிருக்கும்.

என் உழைப்பை எல்லாம் வீணாக்கி விட்டாய், எனது பொன்னான நேரத்தின் அருமை தெரியாதவள் நீ. நான் மட்டும் நீ எக்கேடு கெட்டுப்போ என்று நினைத்து என் வேலையைப் பார்த்திருந்தால் இந்த நேரத்தில் இரண்டு சட்டைகள் தைத்திருப்பேன் என்று புலம்பி இருப்பீர்கள் அல்லவா?

ஆகவே குழந்தையின் வெற்றியில் உங்களுக்குப் பங்கு இருப்பதை சுட்டிக் காட்டாதீர்கள். அதற்காக பழி தீர்த்துக் கொள்ளுவதைப் போல அந்த வெற்றியை குறைத்து மதிப்பிடாதீர்கள். வெற்றியின் விலையை பரிசுப் பொருளின் விலையை வைத்து எடை போடாதீர்கள். குழந்தைகளின் சந்தோஷத்தை, திறமையைப் பணத்தை அளவு கோலாகக் கொண்டு கணிப்பது மிகவும் தவறான செயல். எனவே அந்த வெற்றியைப் பாராட்டுங்கள். குழந்தை உங்களை மிகவும் விரும்புவார்கள். ஏனென்றால் நீங்கள் எதைக் கொடுக்கிறீர்களோ அதுவே திரும்பவும் கிடைக்கும் என்பதே இயற்கை விதி. இதனை மதித்து நடக்கும் பெற்றோர்களுக்கு குழந்தைகளிடையே அன்பும், பாசமும் பெருகுவது நிச்சயம்.

**(22ஆம் பக்கம் பார்க்க)**



- என். ஜனகா



# உசுப்பேற்றலா? நியாய அரசியலா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி ஆச்சரியமளிக்கும் ஒன்றல்ல. அது, எதிர்பார்க்கப்பட்டதுதான். ஏனெனில், தமிழ்த் தேசிய அரசியலுக்குள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வருகை என்பது மிதக்கும் படலம் போன்றது.

அது, கீழ் மட்டத்தில் (சாதாரண மக்களிடம்) நம்பிக்கைகளை ஏற்படுத்துமளவுக்கான முனைப்புக்களைப் பெரிதாக செய்ததில்லை. அப்படியான நிலையில், ஓரணியில் தொடர்ச்சியாக ஒருங்கிணைந்த மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம் இணங்குதல் என்பது இயல்பானது. அதனை இந்தப் பொதுத் தேர்தல் வெற்றியும் பதிவு செய்திருக்கின்றது.

ஆனால், புலம்பெயர் தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், அதன் கொள்கை வகுப்பாளர்களும், ஆதரவுத் தளங்களும் கட்டமைத்த தமக்கான பிம்பம் என்பது நியாயமான அளவினைவிட பெரியது. அது, அச்சுறுத்தும் அளவுக்கானது. அந்த அச்சுறுத்தல் என்பது, தாயகத்திலுள்ள மக்களுக்கும் - புலம்பெயர் மக்களுக்குமான இடைவெளிகளின் போக்கை கடந்த காலங்களில் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களையும் உருவாக்கியிருந்தன.

தமிழ்த் தேசிய அரசியலுரிமைப் போராட்டங்களின் குறைநிரப்பு தரப்பாகவே தாயகத்திலுள்ள மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைக் கொள்கின்றார்கள். ஆனால், கூட்டமைப்பிற்கு மாற்று சக்தியாக தங்களை முன்வைக்கும் தரப்பொன்று, நியாயமான- யதார்த்த வாதங்களோடு இன்னும் உருவாகவில்லை என்றும் நம்புகின்றார்கள். அதுதான், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை களத்திலிருந்து அகற்றுமளவுக்கான செய்தியைச் சொல்வதற்கும் காரணமாகியிருக் கின்றது. இது, தமிழ்த் தேசிய அரசியலின் இரு கட்சி முறையை வரவேற்கும் என் போன்றவர்களை கவலை கொள்ள வைத்திருக்கின்றது.

உசுப்பேத்தல்களற்ற நியாயமான அரசியலை மக்களோடு இணங்கி செய்ய வேண்டிய கடப்பாடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு உண்டு. அதுதான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இன்னும் உத்வேகத்தோடு களமாற்றத் தூண்டும். கூட்டமைப்புக்கு வாக்களித்தவன் என்கிற நிலையில் நான் எதிர்பார்ப்பது அது. (உசுப்பேற்றும் அரசியல் என்பது தென்னாசியாவின் பெரும் வியாதி. அதற்கு த.தே.கூ விதிவிலக்கல்ல)

இன்னொரு விடயம், புலம்பெயர் தமிழ் மக்களை கையாளும் தரப்புக்கள், தாயகத்திலுள்ள மக்களின் மனங்கள் உண்மையாக என்ன வெளிப்படுத்துகின்றது என்பதை சொல்ல முனையுங்கள். அதுதான், இரு தரப்புக்குமான இடைவெளியைக் குறைக்க உதவும். மாறாக, நாம் தோற்கடிக்கப்பட்டுவிட்டோம் என்று கடந்த காலங்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களிடம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது போன்று மீண்டும் அரங்காற்றுவது ஆரோக்கியமான அரசியலுக்கு நல்லதல்ல.

கொள்கை - கோட்பாடு ரீதியிலான அரசியல் அணுகுமுறையை மக்களிடம் எடுத்துச் செல்ல முனையுங்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதான விமர்சனமும்- தூற்றலும் கொள்கை ரீதியிலான அரசியலாகாது. அதனை, கருத்தில் கொள்ளவேண்டியது அவசியமானது. அதனை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கை வகுப்பாளர்களும் - ஆதரவு அமைப்புக்களும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதுதான், அவர்களை மக்களிடம் நெருக்கமாக்கும் - நம்பிக்கை கொள்ள வைக்கும்!

---

# காற்றுப் போன சைக்கிள்

பொதுத்தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்ற பின்னர் சமூக வலைத்தளங்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு எதிரான பதிவுகள் பரவலாகியுள்ளன. தமிழ்த் தேசிய முன்னணியின் தோல்வியைக் கிண்டல் செய்யும் வகையிலான புகைப்படங்கள், வசனங்கள் என்பன கூட்டமைப்பு சார்பானவர்களால் தேர்தலுக்கு பின்னர் அதிகளவில் பதிவிடப்பட்டு வருகின்றன.

உண்மையில் தேர்தல் முடிவுகள் வரும்வரை தமிழ்த்தேசிய முன்னணி மிகப்பலமான போட்டி ஒன்றை ஏற்படுத்தும் என்பதே பலரினதும் கணிப்பாக இருந்தது. ஆனால் முடிவுகள் அந்தக் கணிப்புகளின் மீது சிறுநீரைக் கழித்து விட்டுள்ளன.

'ஒருநாடு இரு தேசம்' என்ற முழக்கத்தோடு

இந்த முறை தமிழ்த் தேசிய முன்னணியின் பிரசாரம் பிரமாண்டமாகவே இருந்தது. ஊடகபலம், பணபலம் என்பன தமக்கு இல்லையென்று சைக்கிள்காரர்கள் (தமிழ்த் தேசிய முன்னணியினரின் செல்லப்பெயர் இதுதான்) அழுத போதும், அவர்களைப் பற்றிய ஒவ்வொரு அசைவையும் பெரும்பாலான ஊடகங்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன. குறிப்பாக ஏராளமான இணையங்கள் சைக்கிள்காரருக்கு பின்னால் சவாரி செய்து நிமிசத்துக்கு ஒருமுறை அவர்களைப் பற்றிய செய்திகளை தந்த வண்ணமிருந்தன.

இதுபோதாதென்று சைக்கிள்காரர்கள் விளையாட்டுக் கழகங்கள், சமூக அமைப்புகள் என்பவற்றுக்கு ஏதோ ஒரு வகையில் நிதியுதவியை வழங்கினார்கள். ஈ.பி.டி.பி கூட சுவரொட்டிப் போரில் அடக்கி வாசிக்க, அங்கஜனோடு போட்டி போட்டுக் கொண்டு சுவரொட்டிப் போரிலும் சைக்கிள்காரர்கள் தீவிரமாக இறங்கினார்கள். இன்னொரு புறத்தில் சிறு சிறு பரப்புரைக் கூட்டங்களையும் அவர்கள் நடத்தத் தவறவில்லை. கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வுக்கு வந்ததை விடவும் சைக்கிள்காரரின் விஞ்ஞாபன வெளியீட்டுக்கு அதிக மக்கள் கலந்து கொண்டதை ஊடகங்கள் ஆச்சரியத்தோடு வெளிப்படுத்தி, மாற்றம் நிகழ்ப்போவதாக ஆருடம் கூறின.

கடைசியில் ஈ.பி.டி.பி, ஐ.தே.க, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளை விடவும் மிகக் குறைவான - சுமார் 15 ஆயிரம்- வாக்குகளையே சைக்கிள்காரரால் பெற முடிந்திருக்கிறது. இந்த எதிர்பாராத தோல்விக்கு என்ன காரணம்?

மக்களுக்கு சைக்கிள் காரர் மீதிருக்கும் கடுப்பு ஒன்றே ஒன்று தான்..! செய்வதை சரியாக செய்யவேண்டும்.கூட்டமைப்பிற்கு சரியான அழுத்தத்தை,போட்டியை ஏற்படுத்துவார்கள் என்று இவர்கள் மீது ஒரு அபிப்பிராயம் மக்கள் மத்தியில் எழுந்ததும் புலம்பெயர் சமூகத்தால் கட்டமைக்கப்பட்டதும் உண்மை.இது கூட்டமைப்பினரது தேர்தல் உபாயங்களில் கூட பயங்கரமான செல்வாக்கைச் செலுத்தி,இவர்களுடன் மினக்கெட வைத்து,வழமையான அவர்களின் தேர்தல் செயற்திட்டங்களில் கோட்டைவிட வைத்தது. ஆனால் அதற்கேற்ற வகையில் அவர்கள் செயற்பட்டார்களா?பெரும்பாலான சமயங்களில் வெறும் சுமந்திரன்-கஜேந்திரக்குமார் இடையிலான விவாதங்களாகத்தான் அவர்களின் பிரசாரங்களை காணமுடிந்தது. உண்மையில் அதுவல்ல அவர்கள் செய்திருக்க வேண்டியது..!! சுமந்திரன் மீதான வசைபாடல்கள் கடைசியில் சுமந்திரனுக்கான இலவச பிரசாரமாக மாறி, அவரை வெற்றி பெறவும் வைத்துவிட்டது. அதாவது சுமந்திரனின் வெற்றியில் கூட்டமைப்பை விடவும் தமிழ்த் தேசிய முன்னணிக்கே அதிக பங்கு உண்டு.

யாழில் மட்டுமல்லாது, வடக்கு கிழக்கில் பரந்துபட்ட ரீதியில் தங்கள் கட்சியை நிலை நிறுத்த முயன்று இறுதியில் நடந்ததென்ன?உருப்படியாக செய்த காரியம் என்ன?தமிழ் தேசிய கொள்கைகளினை கையில் எடுத்து, வன்னியில் 'பிரசைகள் முன்னணி'பெற்றுக்கொண்ட 2022 வாக்குகளைக் கூட இவர்களால் பெறமுடியாமல் 1174 வாக்குகளையே தம்பக்கம் கவர முடிந்திருக்கிறது!மற்றைய மாவட்டங்களை எடுத்துக்கொண்டால்,

யாழில் 5%, மட்டக்களப்பில் 0.36%, திகாமடுல்ல 0.13%, திருகோணமலை 0.63%, வன்னி-0.%1%

என்று போட்டியிட்ட அனைத்து பிரதேசங்களின் வாக்குகளைக் கூட்டிப் பார்த்தால் அது யாழில் கிடைத்த 15 ஆயிரத்தின் உதவியுடன் ஐந்து தேர்தல் மாவட்டங்களில் மொத்தம் 18ஆயிரமாகவே காணப்படுகிறது..!கூட்டமைப்புக்கு கடிவாளம் அவசியம் என்பதை அத்தனை கூட்டமைப்பு ஆதரவாளர்களுமே ஏற்றுக்கொள்வார்கள், ஆனால் அத்தகைய தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு நிகரான,பொறுப்பான கட்சியாக வளர தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தங்கள் தந்திரோபாய அரசியலை மீண்டும் முதலில் இருந்து கவனமாக மீள் சிந்தனை செய்யவேண்டியதன் அவசியத்தை இத்தேர்தலும்,அவர்கள் கடந்துவந்த மாகாணசபை,ஜனாதிபதித் தேர்தல்களும் அவர்களுக்கு உணர்த்தி நிற்கின்றன..!

- உருத்திரா

# மாறுபட்ட ஆசீர்வாதங்கள்



பாக்யராஜ் மகன் சாந்தனுக்கும், ரீ.வி. தொகுப்பாளி கீர்த்திக்கும் சென்னையில் திருமணம் நடைபெற்றது. நடிகர் விஜய் தாலியை எடுத்துக் கொடுத்து மணமக்களை வாழ்த்தினார். இயக்குநரும், நடிகருமான பாக்யராஜ்-பூர்ணிமா தம்பதியின் மகன் சாந்தனு.

இவர் சக்கரக்கட்டி, அம்மாவின் கைபேசி உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். இவருக்கும் ரீ.வி. தொகுப்பாளினி கீர்த்திக்கும் திருமணம் செய்துவைக்க கடந்த சில மாதங்களுக்கு முன்பு இருவீட்டாரும் சேர்ந்து நிச்சயதார்த்தம் செய்தனர். இந்த நிலையில், இவர்களது திருமணம் சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள இஸ்கான் கோவிலில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

இவர்களது திருமணத்தில் இருவரது குடும்பத்தாரும், தமிழ்த் திரையுலக பிரபலங்கள் பலரும் நேரில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். நடிகர் விஜய், இந்த விழாவுக்கு காலையிலேயே வருகை தந்து, தாலி கட்டும் வரை கூடவே இருந்து மணமக்களை ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார்.

மேலும், சரத்குமார், ராதிகா சரத்குமார், பிரபு, ராதாரவி, மணிரத்னம், சுஹாசினி, குஷ்பூ, விஷால், தெலுங்கு நடிகர் வெங்கடேஷ், இயக்குநர்கள் தரணி, ஹரி, காமெடி நடிகர் சூரி, கார்த்தி, ஜோதிகா, ரேவதி, சுகன்யா, நகுல், சங்கர் கணேஷ், ஆர்.சுந்தர்ராஜன், விக்ராந்த் உள்ளிட்ட சினிமா பிரபலங்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். திருமணத்துக்கு வருகை தந்த அனைவரையும் இயக்குநர் பாக்யராஜின் சிஷ்யர்களான இயக்குநர்கள் பார்த்திபன், பாண்டியராஜன் இருவரும் வாசலில் நின்று வரவேற்றனர்.

இந்நிலையில் பாக்யராஜ் - பூர்ணிமா திருமணத்தின் போது எம்.ஜி.ஆர் தாலி எடுத்துக் கொடுக்க திருமணம் நடந்தது குறிப்பிடத்தக்கது. இப்போது பாக்யராஜின் மையனுக்கு விஜய் தாலி எடுத்துக் கொடுக்க திருமணம் நடந்துள்ளது.

## பெரும் விலையில் ரஜனி

இயக்குநர்லிங்குசாமி தயாரிப்பில்
வகார்த்திகேயன் நடித்திருக்கும் ர
வேந்தர்மூவிஸ் நிறுவனம் வெளியி
இன்னும் அவர்கள் இதுபற்றி வெ
இது சம்பந்தமாகப் பேச்சுகள் நட
இந்தப்படத்துக்கு வேந்தர்மூவிஸ்
கொடுத்திருப்பதாகவும் சொல்லப்
திரையரங்குகளில் தி
கோடி கொடுக்கப்பட்டிரு
கியாரண்டி முறைக்காக
என்று பேசப்பட்டிருப்பத
சிவகார்த்திகேயன் படத்
படத்துக்கான தொலைக்
வியாபாரங்களையும் க
றும் சொல்லப்படுகிறது.
வகார்த்தி கேயன், விஜய்
க்றார் என்று சொல்ல

## விக்ரம்பிரபு ஜோடியாக ஷாம்லி

ரோமியோ ஜூலியட் படத்தைத் தயாரித்த நிறுவனம் அடுத்துத் தயாரிக்கும் படமொன்றில் விக்ரம்பிரபு கதாநாயகனாக நடிக்கிறார். அந்தப்படத்தை அருள்நிதி நடித்த தகாரு படத்தை இயக்கிய கணேஷ்விநாயக் இயக்கவிருக்கிறார். சுகுமார் ஒளிப்பதிவு செய்கிறார் என்று அறிவிக்கப்பட்டது. இந்தப் படத்தில் நாயகி உட்பட மற்ற நடிகர் நடிகையர் தேர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றும் சொல்லியிருந்தார்கள். விக்ரம்பிரபு இப்போது ஜி.என்.ஆர்.குமாரவேலன் இயக்கும் வாகா படத்தின் படப்பிடிப்பில் இருக்கிறார். காஷ்மீரில் படத்தின் படப்பிடிப்பு நடந்து வருகிறது. அந்தப்படத்தை முடித்துவிட்டுத்தான் கணேஷ்விநாயக் படத்துக்கு வருகிறாராம். இந்தப்படத்தில் விக்ரம்பிரபு ஜோடியாக நடிக்கப் பல நாயகிகளைத் தேடிக் கடைசியாக அஜித்தின் மச்சினி ஷாம்லியை ஒப்பந்தம் செய்திருப்பதாகத் தெரிகிறது. ஷாம்லி சில ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு தெலுங்குப்படத்தில் நடித்தார். அந்தப்படம் தோல்வி. அதனால் மறுபடி படங்களில் நடிக்காமல் இருந்தார். தமிழில் ஏற்கனவே பல படங்களில் அவரை நடிக்கச் சொல்லிக்கேட்டதாகச் சொல்லப்பட்டது. அப்போதெல்லாம் ஒப்புக்கொள்ளாத ஷாம்லி, இப்போது விக்ரம்பிரபு படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.





## அயிட்டம்டான்ஸ் ஆடிய சோனியாஅகர்வால்

சோனியாஅகர்வால் திரும்ப நடிக்க வந்த பிறகு நிறைய படவாய்ப்புகள் வருமென்று எதிர்பார்த்தார். ஆனால் அவருடைய எதிர்பார்ப்பு பொய்த்துப்போனது. மிகச்சில படங்களில் மட்டுமே அவருக்கு வாய்ப்பும் கிடைத்தது. அண்மையில் அவர் நடித்த பாலக்காட்டுமாதவன் படம் வெளியானது. அதுவும் பெரிதாகப் போகவில்லை. இதற்கிடையே தொலைக்காட்சிகளிலும் நடிக்கத் தொடங்கினார். ஆனாலும் பேசப்படும் நடிகையாக அவர் இல்லை. அதனால் அயிட்டம்டான்ஸ் எனப்படும் ஒரு பாடலுக்கு ஆடவும் முன்வந்திருக்கிறார். இதுவரை இல்லை. வெளியாகவிருக்கும் படம் சோனாவில். அடுத்தவாரம் மலையாளத்தில் ஓம்னாயிபாரி. மக்கள்செல்வன் நாயகனாக நடித்திருக்கும் ஆடியிருக்கிறாராம் அந்தப்படத்திற்காக ஒரு பாடலுக்கு ஆடியிருக்கிறார் என்பதாலும் சோனியாஅகர்வால். அந்தப்பாடலில் நாயகனும் இருக்கிறார் அந்தப்பாடல் பெரும்பொருட்செலவில் படமாக்கப்பட்டதாலும் அந்தப்பாடலில் ஆட ஒப்புக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது.





# இசைப் புயலுடன் கிரிக்கெட் ஜாம்பவான் சந்திப்பு !

இசைப் புயலுடன் கிரிக்கெட் ஜாம்பவான் சந்திப்பு !

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர், இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மானை அவரது வீட்டில் சந்தித்துப் பேசினார். சென்னையில் எம்.ஆர்.எப். பவுண்டேசன் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் நேற்று சென்னை வருகை தந்தார்.

பின்னர் இசை அமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானை அவரது வீட்டுக்கு சென்று சச்சின் சந்தித்தார். அப்போது ஏ.ஆர். ரஹ்மானின் தாயாரும் உடன் இருந்தார். இந்த சந்திப்பின் போது ஏ. ஆர். ரஹ்மான் இசை அமைக்கும் விதம் குறித்து, சச்சின் நேரில் பார்த்தார்.

சச்சினுக்கு சில ட்யூன்களை ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்து காண்பித்தார். சந்திப்பு முடிந்ததும், தான் ஏ.ஆர். ரஹ்மானின் தீவிர ரசிகர் என்றும், மரியாதை நிமித்தமாக சந்திக்க வந்தாகவும் சச்சின் கூறினார்.



# ...ல் ரஜனி முருகன்?

...தசாமி தயாரிப்பில் பொன்ராம் இயக்கத்தில் சி... நடித்திருக்கும் ரஜினிமுருகன் படத்தை ...நிறுவனம் வெளியிடவிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ...ன் இதுபற்றி வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் ...கப் பேச்சுகள் நடந்துகொண்டிருக்கின்றனவாம். ...கு வேந்தர்மூவிஸ் நிறுவனம் பெரியவிலை ...ளகவும் சொல்லப்படுகிறது. ...யரங்குகளில் திரையிடும் உரிமைக்காக மட்டும் முப்பத்தைந்து ...கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இதில்லிலிமம் ...ண்டி முறைக்காக ஒரு தொகை அதற்கு மேல் ஒரு தொகை ...பேசப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.எப்படியிருந்தாலும் ...த்திகேயன் படத்துக்கு இது பெரியவிலை என்கிறார்கள். இந்தப் ...க்கான தொலைக்காட்சிஒளிபரப்பு உரிமை உள்ளிட்ட மற்ற ...ரங்களையும் கணக்கிட்டால்ஐம்பதுகோடியைத் தாண்டும் என் ...சால்லப்படுகிறது. இது அப்படியே உண்மை என்றால் சி... ...தி கேயன், விஜய், அஜித் ஆகியோரை நெருங்கிக் கொண்டிருக் ...ன்று சொல்லலாம்.

# புலி தமிழ்நாட்டுக் கதையில்லையா?

சிம்புதேவன் இயக்கத்தில் விஜய், ஹன்சிகா, ஸ்ருதிஹாசன், ஸ்ரீதேவி , சுதீப், பிரபு, தம்பி ராமையா உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியுள்ள படம் புலி படத்தின் கட்அவுட்கள் நேற்று முன்தினம் வெளியானது. படத்துக்கு இசை தேவி ஸ்ரீ பிரசாத்.படம் செப்டெம்பர் 17ஆம் திகதி வெளியாக இருக்கிறது.

இந்தப் படத்தின் கட்அவுட்டுக்களில் கூட கதையை சரியான முறையில் கணிக்க முடியவில்லை , மேலும் கதை தெரிந்துவிடக்கூடாது என்பதில் படக்குழு கவனமாக இருப்பது கச்சிதமாக தெரிகிறது. இந்த நிலையில் படத்தின் கட்அவுட் காட்சிகள் தமிழ் சார்ந்தவைகளாக இல்லாமல் முற்றிலும் மேலை நாட்டுக் கலாசாரத்தில் உள்ளன.

முக்கியமாக ஸ்ரீதேவியின் உடைகள் நார்னியா படத்தின் ஒயிட் விட்ச் பாணியில் பெரிய வித்யாசமான கவுன்கள், பெரிய அளவிலான கிரீடங்கள், தங்கம் நிறம் மட்டுமின்றி வேறு உலோகங்கள் கலவையிலும் உள்ளன.

அதே சமயம் விஜய் மற்றும் சுதீப்பின் உடைகளும் திரைப் படத்தில் அரசர் கால தோற்றத்தையே காட்டுகிறது. ஹன்சிகா வரும் காட்சிகளில் அவரது உடைகள் இன்னும் கொஞ்சம் மாற்றமாகி அரேபிய கலாச்சாரத்தை காட்டுவது போல் அமைந்திருப்பது மற்றொரு உதாரணம்.

இது தவிர்த்து கடைசியாக விஜய் ஒரு மிருகத்துடன் மோதும் காட்சி அது ஒரு கருப்பு நிற சிறுத்தை. கருப்பு நிற சிறுத்தைகள் ஆசியா கண்டத்தில் இருப்பினும் வெகுவாக காணப்படுவது ஆப்பிரிக்கக் காடுகளில் தான். மேலும் ஆசியாவில் காணப்பட்டாலும் இந்தியா அதன் சுற்றுவட்டாரங்களில் கிடையாது என்பதால் கண்டிப்பாக தமிழகத்துக்குச் சொந்தமான காட்சியாக அது இருக்க வாய்ப்பில்லை.

இந்நிலையில் விஜய் பயன்படுத்தும் வாள் , காட்டப்படும் பிரதேசங்கள், சிலைகள் யாவும் ஹாலிவுட் படத்தின் சாயலே உள்ளன. நரேன் உள்ளிட்ட மக்கள் மட்டும் கொஞ்சம் இந்தியர்களுக்கான சாயலில் இருக்கிறார்கள். எனவே புலி தமிழ் சார்ந்தக் கதையா என்பதில் சந்தேகம் வலுத்துள்ளது.



# பாட்ஷா படத்துக்கும் அஜித் படத்துக்கும் என்ன வேறுபாடு?

சிறுத்தைசிவா இயக்கத்தில் அஜித் நடிக்கும் படத்தில் அஜித்துக்கு டாக்சி சாரதி வேடம். படத்தின் கதை சென்னை மற்றும் கொல்கத்தாவில் நடப்பதுபோல இருக்கிறது. ஓரிடத்தில் பெரிய ரவுடியாக இருக்கிறவர் இன்னொரு ஊருக்கு வந்து அமைதியாக வாழுகிறார் என்பது தான் கதை.

இவற்றால் இந்தப்படம் ரஜினியின் பாட்ஷா போலவே இருக்கிறது என்றும் அந்தப்படத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் இதுபற்றி படக் குழுவினர் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. ஏனெனில் பாட்ஷா படத்துக்கும் இதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதால் அவர்கள் இந்தச்செய்திகளைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லையாம்.

அப்படி என்ன வேறுபாடு? என்றால், இந்தப்படத்தில் அஜித்தின் அன்புக்குரிய தங்கைக்கு மிகப்பெரிய ஆபத்து ஒன்று ஏற்படுகிறது. அந்த ஆபத்தை விளைவித்தவர்களுக்கு எதிராக அமைதியாக இருக்கும் அஜித் பொங்கி எழுகிறார் என்று சொல்கிறார்கள். தங்கைக்கு ஏற்படுகிற ஆபத்தில் வேறுபாடு இருக்கலாம் பாட்ஷாவிலும் தங்கைக்காகத்தானே ரஜினி மறுபடி பாட்ஷாவாகிறார்.

மிருசுவில் தமிழ்த்தாசன்



# குரங்கு மனம்

நேரம் மாலை ஐந்து மணியாகிக் கொண்டிருந்தது. சரியாக ஐந்தரை மணிக்கெல்லாம் சுகந்தன் தன் வீட்டில் நிற்க வேண்டும். இப்படித்தான் ஏற்பாடு. இன்றைக்குத் தவற முடியாது. சொன்ன சொல்லைக் காப்பாற்றியே ஆக வேண்டும்.

"இஞ்சாருங்கோ! நான் ஒருக்கால் வெளியிலை போயிற்று வாறன். பிள்ளையளைப் பார்த்துக் கொள்ளுங்கோ!

என்னுடைய அனுமதிக்குக் காத்திராமல் கையில் பையொன்றுடன் நடையைக் கட்டினாள் எனது அருமை மனைவி மனோரஞ்சிதம். இன்று எனக்குச் சம்பள நாள். அலுவலகத்திலிருந்து வந்த கையோடு சம்பளம் முழுவதையும் பறித்தெடுத்து விட்டாள். இனிச் சும்மாயிருப்பாளா! வீட்டுப் பொருள்கள் வாங்குவது, கடைக் கணக்கைத் தீர்ப்பது, சீட்டுக்காசு, மாலா அக்காவின் வட்டிக்காசு இப்படி ஏராளமான பிரச்சினைகளெல்லாம் அவள் தலையில் தானே!. பாவம்! அவள் தானே குடும்ப நிர்வாகத்தை முன்னின்று நடாத்துபவள்.

அது சரி நேரம் ஓடிக்கொண்டிருக்கிறது. எனக்குக் கையும் ஓடவில்லை. காலு மோடவில்லை.

'சே! எங்கை வைச்சனான். சம்பளக் காசிலை மனிசிக்குத் தெரியாமல் மூவாயிரம் எடுத்து வைச்சனான். எங்கை வைச்சது எண்டதை மறந்து துலைச்சுப்போட்டனே! எல்லா இடமும் தேடியாச்சு. சாமிப்படத்தட்டு, தலைவாசல் கப்பு, குசினிப் பிளேட் எல்லாம் தேடியாச்சு. எங்கை! அவசரத்திலை வைச்சது! மனிசிக்குத் தெரிஞ்சு தெண்டால் நடக்கிறது வேறை... அதுக்குப் பயந்து தானே ஒளிச்சுப் பதுக்கி எங்கையோ வைச்சிட்டன். வைச்ச இடம் நினைவில் இல்லை"

கடந்த மாதம் பத்தாம் திகதி எனது பிறந்த நாள். பிறந்த நாள் 'பார்ட்டி' வைக்கின்றதாக நண்பர்களுக்குச் சொல்லி விட்டேன். கொடுத்த வாக்குறுதியை மீறவே முடியாது. எனது வறுமை மிக்க குடும்ப நிலைமையில் சம்பளக்காசில் 'பார்ட்டி' வைப்பதற்கு மனைவி சம்மதிக்கவே மாட்டாள். அது தானிந்த ஒளிப்பும் மறைப்பும். வேறென்ன செய்ய! நண்பர்களையும் சமாளிக்க வேண்டும். இல்லையேல் அலுவலகத்தில் என்னை யாரும் மதிக்க மாட்டார்கள். இதற்குள் குடும்பக் கஷ்டம் வேறு.

இப்போது பிள்ளைகள் மூன்றையும் கவனிக்க வேண்டும். மனைவி வீட்டுக்குத் திரும்பும் வரை கவனமாகப் பார்க்க வேண்டும். மூத்தவள் நிசா. வயது ஐந்து. அவள் அவ்வளவு குழப்படியில்லை. அடுத்தது ஷர்மிலா. வயது மூன்று. மகா துரு துரு. ஓரிடத்தில் நிற்கமாட்டாள். ஷாமினி கடைக்குட்டி! ஆறு மாதம் கூட ஆகவில்லை. இப்போது பிரச்சினை கொடுப்பவள் மூன்று வயது ஷர்மிலா. மெல்லத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டேன். ஐயோ! கடவுளே! பிள்ளையைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. அந்தக் குழந்தையின் காதுகளிலிருந்த தோடுகளைக் கழற்றி மூவாயிரம் ரூபா அடகு வைத்தது இப்போது ஞாபகம் வந்து மனதைக் கறையான்களாக அரித்தெடுத்தன. வீட்டுவாடகைப் பணம் செலுத்த வேண்டும். வீட்டுக்காரி கமலமக்கா வந்து உயிரை வாங்கினாள். வேறுவழியின்றிப் பிள்ளையின் காதுத்தோடு வைத்தாயிற்று. மூத்தவள் நேசறிக்குப் போவதால் அவளின் தோடுகள் தப்பி விட்டன. இவளின் தோடுகளை எப்படியும் மீட்டுக்கொடுக்க வேண்டும். பாவம்! குழந்தையல்லவா!

"கடவுளே! வைச்ச மூவாயிரத்தையும் காணயில்லை. உங்கை தேடாத இடமுமில்லை. ஒரு வேளை ஒளிச்சு வைச்சதை மனிசி கண்டு கிண்டு எடுத்துப் போட்டாளோ! எதுக்கும் கேட்டுப்பார்ப்பம். சே! விசர் வேலை! அவள் எடுக்கவில்லையெண்டால் வீணாய் மாட்டுப்பட வேண்டி வந்திடும். பொல்லைக்குடுத்து அடிவாங்கின மாதிரிப் போயிடும். வேண்டாம். பிள்ளையாரோ இப்ப இந்த மூவாயிரமும் கிடைச்சுதெண்டால் இந்தப் பிள்ளையின்ரை தோட்டுக் குச்சியை எண்டாலும் எடுத்துக் குடுக்கலாம். 'பார்டி'யும் வைச்சபாடில்லை. இந்தப் பிள்ளையின்ரை தோடு எடுக்காமல் விட ஏலுமே! 'பார்ட்டி'யைப் பிறகொரு நாளைக்கு வைக்கலாம். ஒண்டுக்கும், இப்ப வைச்ச இடத்திலை காசைக்காணயில்லையே! மனிசிக்குப் பயந்து அவசரத்திலை எங்கையோ வைச்சுப் பொரிஞ்சு போனன். மறதி! மறதி! கண்டறியாத மறதி!

'பார்ட்டி'க் கென்று அங்கே சரவணனும் சுகந்தனும் மட்டும் தான் வருவார்கள். ஆனந்தனும் வருவான். வந்தால் ஒரு சோடா மட்டும் போதும். அவன் 'ட்ரிங்ஸ்' எடுக்க மாட்டான். என்னையும் சேர்தால் மூவாயிரம் ரூபா போதும். எனக்குப் 'ட்ரிங்ஸ்' அடிக்க வேண்டும் என்று பெரும் ஆசையாக இருக்கின்றது. ஒரு 'சதுரமும்' இரண்டு 'ரின்னும்' வாங்கிக் கோபாலு கடையிலை கோழிப்பொரியலும் ஒரு 'டிஸ்' றாலும் வாங்கினால் எல்லாம் திருப்தியாயிருக்கும். கோபாலு கடைக் கோழிப் பொரியல்.... நினைத்தாலே வாயூறும்... அடிக்கப் போகும் 'தண்ணி'க்குத் தோதாகப் பொரிப்பான் மனிதன். எப்போது இதைச் சுவைத்துத் தண்ணியையுமடிக்கலா மென்று என்னுடைய மனமும் ஆலாய்ப் பறந்தது உண்மைதான். ஆனால் வைத்த இடத்தில் காசைக்காணவில்லை. தண்ணியாவது.... வென்னியாவது...! பிள்ளையின் வெற்றுக்காதுகளும் மனச்சாட்சியை குடைந்தெடுத்துக் கொண்டிருந்தன.

கையில் அரிசிப்பையுடனும் மரக்கறி வகைகள், எண்ணெய்ப் போத்தல் இன்னும் ஏதேதோ பொருள்களைச் சுமக்க முடியாது சுமந்து கொண்டு தெருப் படலைக்குள்ளால் வந்து விட்டாள். நேரத்தைப் பார்த்தேன். இன்னும் ஐந்தரையாகவில்லை. அது சரி ஆகியென்ன ஆகாமல் விட்டென்ன! வைத்த இடத்தில் பணமில்லையே! பார்ட்டிக்கும் போக முடியாது. பிள்ளையின் தோட்டை எடுத்துக் கொடுக்கலாம் ஒரு இழவுக்கும் காசில்லையே! பைத்தியமே பிடித்து விடும் போல இருந்தது.

வழக்கமாகக் கொடுக்கும் சம்பளக்காசில் மூவாயிரம் ரூபா குறைத்துக் கொடுத்ததுக்கு மனைவி என்னைச் சும்மா விட்டிருப்பாளா!

"எடி விசர் மனிசி! என்ரை ஒவ்வீசிலை வேலை செய்யுற ஒரு கூட்டாளியின்ரை பெண்சாதிக்கு ஏதோ வருத்தம் கடுமையாம்.கடனாய்க் கேட்டான்.வாற சம்பளத்திலை திருப்பித் தருவான். எல்லாரும் பாவம் தானே! மனிசருக்கு மனிசர் உதவி செய்ய வேணும் தானே!

அருமையானதொரு கற்பனையை உருவாக்கி அவிழ்த்து விட்ட புரளியைப் பாவம்! அப்படியே நம்பி விரித்தாடிய படத்தைச் சுருக்கி அடங்கிக் கொண்டாள்.

"பிள்ளையாரே! இந்த மூவாயிரமும் எங்கை போயிருக்கும். இப்ப கிடைச்சுதெண்டால் பிள்ளையின்ரை தோட்டை எடுத்துக் குடுக்கலாம். 'பார்ட்டி'யைப் பிறகு ஒரு நேரம் பார்ப்பம். அது சரி எங்கை வைச்சனான்.


மனம் அறுத்து வைத்த ஆமை இறைச்சியாக நேரம் கடந்தும் துடித்துக் கொண்டிருந்தது. தேடுகின்றேன். தேடித்... தேடித்...

"அடக் கடவுளே இஞ்சை கிடக்குது! நானும் ஒரு மடையன். அம்மிக்குக் கீழை வைச்சிட்டு உவடெமல்லாம் தேடி...!"

நேரம் இன்னும் ஐந்தரையாகவில்லை. சரியான நேரம். நண்பர்கள் காத்துக் கொண்டிருக்கப் போறார்கள். சைக்கிளை எடுத்தேன். போவதற்கு. வெற்றுக்காதுகளுடன் மூன்று வயதுச் ஷர்மிலாவும் முன்னே வந்து நின்றாள். கோபாலு கடைக் கோழிப் பொரியல்! மனம் கேட்கவில்லை. நான் போகின்றேன். தோடு! பின்பும் எடுக்கலாம் தானே!

# கவிதைப்புனல்

## எங்கே போனது?



அஹிம்சையும்
அறநெறிகளும்
அடக்கமாகிப் போனது
காந்தித் தாத்தா
கற்சிலைக்குள்...

கற்பும்
கணவன் பால்
கரிசனையும்
கவிழ்ந்து போனது
கண்ணகி சிலைக்குள்...

வீரமும், தீரமும்
வீழ்ந்து கிடக்கிறது
புளியமரத்தடி
கட்டபொம்மன்
சிலைக்குள்...

கடமையும்
கட்டுப்பாடும்
கண்ணியமும்
காததூரம்
கடந்து விட்டன
சிலையான அண்ணா
விரல் காட்டும்
திசை நோக்கி...!

- சுசி

## உறவுகளும் விரிசல்களும்

இன்னும் இருக்கின்றோம்
உண்மை உணராதவர்களாய்...
உறவென்று நினைத்தவர்கள்
நம்மை -
பொருட்படுத்துவதே இல்லை...
வாசல்வரை வந்து அவ்வப்போது
காலைவாரி விடுபவர்கள்.

புதிய உறவுகள் வந்து
பெரிதாய் கிழித்துவிடும்
என்றிருக்க,
பொய்களுக்குக் கூட
அவர்கள் முலாம்
பூசிவிட்டார்கள்!

ஏமாறுவது - எங்கள்
இரத்தத் துணிக்கையாய்!
உண்மைகள் ஏராளம்
கட்டுப் படுத்துகையில்-
மனிதாபிமானம் எமக்குள்
உன்னிப்பாய் இருக்கையில்-
இயற்கையை சிலநேரம்
மலைக்க வைக்கும் போது-

மாறிவிட்டேன்
மறந்தவிட்டேன்- என
உறவுகள் கொஞ்சம் தலைகாட்டும்!

மாங்காய் கொட்டைக்குள்
பத்திரமாய் அடங்கிக் கிடக்கும்
வித்தின் பருப்பு போல,
தேசியக் கடலுக்குள்
இணையப்படாத கிணறாக,
சின்னச் சுகங்களிலே
சந்தோஷம் கண்டுகொண்டு
இன்னும் இருக்கிறோம்
உண்மை உணராதவர்களாய்
உறவுகளில் விரிசல்களாய்...!

- துஷ்யந்தி



## பிரிக்கப்பட்ட பிரியம்

அதிகாலைப் பொழுதுகளில்
ஆடு மேய்க்கும் சாக்கில்
புல் தாங்கிய பனித்துளிகளை
உடைத்துக் கொண்டே ஊர் கண்
மறைந்து கொண்டே காதல்
செய்து வந்தோம்..!

யார் கண் பட்டதோ இன்று
இருவருமே கோயில் திருவிழாவில்
பலூன் வாங்க நிற்கின்றோம்
நீ உன் குழந்தையுடன்
நான் என் குழந்தையுடன்..!

என்னசெய்வது...

சாதிகள் பார்த்து மல்லிகை தனியே
ரோஜாக்கள் தனியே என்று
பிரித்து வைக்காத பூ மாலையை
கழுத்தில் அணிந்து கொண்டு
சாதிகள் பார்க்கும் மண
மேடைகள்தான் இங்கு அதிகம்..

செ.மணி





## எதுவும் சாத்தியமே!

| அருவி

தோல்வியும் சகஜம்தான். இரண்டையும் நேசிக்கப் பழகிக்கொள்வதே நல்ல அனுபவம் என்று கருதப்படுகிறது. வெற்றிகளிலிருந்து நாம் கற்றுக்கொள்வது குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், தோல்விகளிலிருந்தும், தவறுகளிலிருந்தும் நாம் நிறையக் கற்றுக்கொள்ள முடியும்.

வெற்றி என்னும் மூன்றெழுத்தை விரும்பாதவர்கள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வெற்றி என்பது தற்செயலாக நிகழ்வதில்லை. இது நமது மனப்பாங்கின் விளைவே ஆகும். நமது மனப்பாங்கே நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் ஒன்றாகும். வெற்றி என்பதே குறிக்கோளை அடைவது எனப் பொருள்படும். குறிக்கோள் இல்லாமல் இருந்தால் நிச்சயமாக வெற்றி என்பதே கிடையாது. குறிக்கோள் இல்லாதவரின் வாழ்க்கை, வழி தெரியாமல் தவிக்கும் குருடரின் வாழ்க்கையைப் போன்றது.

நெஞ்சிலே துணிவில்லாதவனுக்குத், தோல்விகளெல்லாம் தடைக்கற்கள். துணிவுள்ளவனுக்கோ, தடைக்கற்கள்கூட அவனைத் தூக்கி நிறுத்துகின்ற படிக்கற்கள்தான் எனக் கூறினால் அது மிகையாகாது. தோல்வி என்பது நம்மோடு நிரந்தர வாசம் புரிய வருகிற ஒன்றல்ல. அது சில சமயங்களில், சில சந்தர்ப்பங்களில், சில இடங்களில் நம்மைத் தொட்டு விட்டு விடுகிறது.

எல்லாத் துறைகளிலும் முழுமைப் பெற்றவனாக, வெற்றி அடைந்தவனாக, எந்தவொரு மனிதனையும் நாம் இனம் காட்டுதல் இயலாது. ஒன்றில் கொடி கட்டிப் பறக்கிறவன், இன்னொன்றில் குப்புற விழுந்து மண்ணைக் கௌவுகின்றான். ஆக, இப்படி வெற்றியும் தோல்வியும் சராசரி மனிதனின் வாழ்க்கையில் வந்து போகிற சாதாரண சங்கதிகளே என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவற்றையே எண்ணி எண்ணி மனச்சோர்வு காணக் கூடாது. வெற்றியின் திரைமறைவில் தோல்விகளும் நம்மைத் தொடரலாம். தோல்வியை படிக்கற்களாக்கிக் கொள்ள வேண்டும்.

எந்தத் தோல்வியும் நிரந்தரமில்லை என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு கதவு மூடினால், அடுத்த கதவைத் திறக்க முயல வேண்டும்.

தோல்விக்குப் பயந்து சிலர் எப்போதும் முயற்சி செய்வதே இல்லை. சாதிக்க விரும்பும் மனிதன் தோல்விகளைப் பற்றியோ எதிர்ப்புகளைப் பற்றியோ, எதிரிகளைப் பற்றியோ, வறுமையைப் பற்றியோ சிந்தித்துக் கொண்டு ஒரே இடத்தில் நின்று காலத்தை வீணாக்கமாட்டான். எப்படி இதை எதிர்கொள்வது என்று செயல்பட ஏற்ற வழி எதுவோ அதைத் தேர்ந் தெடுத்து முடிக்க நடை போட்டு விடுவார்கள். தன்னம்பிக்கை உள்ளவனுக்கு எல்லா வாசல்களும் திறந்து வரவேற்பு கொடுக்கும்.

நாம் சரியான மனப்பாங்கு உள்ளவராக இருந்தால், தோல்வியை ஓர் ஆசிரியராகத்தான் கருதுவோம். தோல்வி அடையும்போது நாம் ஏமாற்றமடையலாம். ஆனால், முயற்சி செய்யாமலேயே இருந்து விட்டால், முற்றிலும் அழிந்துபோக நேரிடலாம். எனவேதான், தோல்வியிலிருந்து ஆதாயமடைவதே வெற்றியின் திறவுகோல் என்றும் கூறுகின்றனர். தோல்வி என்பது ஒரு சுற்றுப் பாதையே தவிர அதுவே முடிவாகாது. இது ஒரு தாமதமே தவிர பேரிடியில்லை என்பதை முதலில் நாம் மனதில் ஆழமாக பதியச் செய்ய வேண்டும். வெற்றி பெற வேண்டும் என்றுதான் ஒவ்வொருவரும் விரும்புகிறார்கள். அப்படி விரும்பினால் மட்டும் போதுமா..? எதிர்ப்படும் தோல்வியைப் புறமுதுகு காட்டாமல் எதிர்கொள்ள வேண்டும். தோல்வி பற்றிய பயம் பல சமயம் தோல்வியை விட மோசமாக இருக்கலாம். ஆனால், நாம் அதனைக் கண்டு ஒரு போதும் துவண்டு விடக்கூடாது. தோல்வியைக் கண்டு துவண்டு போவதால் ஒரு பயனுமில்லை.

முயற்சியில் வெல்ல வேண்டும், எடுத்த காரியத்தில் வெற்றி பெற வேண்டும் என்று நாம் விரும்பினால் இயலும் என எண்ணித் துணிந்தால் தான் உண்டு. இல்லையேல் தோல்வியும் துயரமும்தான் நம் முயற்சிகள் அனைத்தையும் பின் தொடர்ந்து கொண்டு இருக்கும்.

நமக்குள் இருக்கும் தோல்வி மனப்பான்மையை எடுத்து வெளியே வீசிவிட்டு அந்த இடத்தில் வெற்றி மனப்பான்மையை நிரப்ப வேண்டும். எப்போதும் தோல்வி என்பது மீண்டும் ஒரு முயற்சியை இன்னும் திறமையுடன் தொடங்குவதற்கு வழங்கப் படும் வாய்ப்பாகும். எனவே, தோல்விக் கான் காரணத்தை அறிந்து கொண்டு அதைத் திருத்திக் கொண்டு அடுத்த முயற்சி செய்ய என்றுமே கற்றுக் கொள்ள வேண்டும்.

தோல்வி இன்றி வரலாறா? பலமுறை முயன்று தோல்வியுற்றுத்தான் அச்சிறு உருவத்தைக் கொண்ட சிலந்தியே வலை பின்னுகிறது. சிலந்தி தோல்வியைக் கண்டு சோர்வுற்று தன் முயற்சியிலிருந்து பின் வாங்கியதாக சரித்திரம் ஏதும் இல்லை. தோல்விகளைப் பெரிய மலைகளாக எண்ணாமல், அதனை மண் மேடுகளாகப் பார்க்க வேண்டும். அப்போதுதான் தோல்வியின் சுமை நம்மை அழுத்தாது. தோல்வியை ஏற்றுக்கொண்டு முயன்றால் வெற்றி நிச்சயம். முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை. வெற்றிக்கு முன்னர் ஓய்வென்பதில்லை என்று செயல்படு. வெற்றி மாலை உனதாகும்.

இறுதியாக, தோல்வியே வெற்றியின் முதற்படி எனும் பழமொழியின் விளக்கத்தை நாம் நன்குப் புரிந்து கொண்டு தோல்வியை மனதார ஏற்றுக் கொண்டு, வெற்றியை நோக்கிப் வீறுநடை போடக் கற்றுக் கொள்ள வேண்டும்.

# அரபு நாடுகளில்...

( 07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு. அரபு லீக் நாடுகள் ஐக்கிய அமீரகம் தமக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடு எனக் கருதுகின்றனர்.

**ஈரானின் நிகராளிப் போர்கள்(Proxy Wars)**

ஈரான் தற்போது சிரிய அரசினூடாகவும் ஹிஸ்புல்லாவின் உதவியுடனும் சிரிய அரசுக்கு எதிரான ஒரு நிகராளிப் போரையும், ஈராக்கில் அதன் அரசினூடாக ஐ எஸ் அமைப்பிற்கு எதிரான ஒரு நிகராளிப் போரையும், யேமனில் சவுதி அரேபியாவிற்கு ஆதரவான அரசுக்கு எதிராக ஹூதி இனக்குழுமப் போராளிகளூடாக ஒரு நிகராளிப் பேரையும் நடாத்தி வருகின்றது. நிகராளிப் போர் நேரடிப் போரிலும் பாக்கச் செலவு மிக்கது. அரபு சுனி முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சிரியாவை ஈரானின் ஆதிக்க நாடாக மாற்றுவது இயலாத ஒன்று. அப்பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்த விரும்பும் துருக்கியையும் சவுதி அரேபியாவையும் மிஞ்சி இதைச் சாதிக்க வேண்டும். அமெரிக்கா சிரியாவில் சுனி முஸ்லிம்களின் ஆட்சியை விரும்புகின்றது. ஈராக்கில் ஐ எஸ் அமைப்பு ஈரான், ஈராக்கிய அரசு, ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றின் தக்குதலை எதிர் கொள்கின்றது. ஐ எஸ் அமைப்பை அங்கு ஒழித்துக்கட்டினாலும் மொழியாலும் இனத்தாலும் வேறுபட்ட ஈராக்கை ஈரான் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதும் கடினம். யேமனைப் பொறுத்தவரை அது சவுதி அரேபியாவின் கொல்லைப் புறம். ஈரானுக்கு ஆதரவான ஹூதி இனக்குழுமம் எண்ணிக்கை அளவின் குறைவானது.

**ஈரானிற்கு சூழ்நிலை சரியில்லை**

ஈரானைச் சுற்றவர சுனி முஸ்லிம்களின் நாடுகளே இருக்கின்றன. தென் கிழக்கில் ஒரு நீண்ட எல்லையுடன் சவுத் அரேபியாவும் வடகிழக்கில் அமெரிக்காவின் நட்பு நாடான துருக்கியும் கிழக்கில் உறுதியற்ற ஆட்சியையும் பெரும்பானமை சுனி முஸ்லிம்களையும் கொண்ட சவுதியின் நட்பு நாடான பாக்கிஸ்த்தானும் மேற்கில் ஈரானுடன் எட்டு ஆண்டுகள் போர் புரிந்த ஈராக்கும் ஈரானுக்கு நட்பு நாடுகள் என்பது குறைவு சீனாவும் இரசியாவும் அவ்வப்போது அரசுறவியலில்(இராசதந்திரத்தில்) ஈரானுக்குச் சார்பாக நடந்து கொண்டாலும் அவை ஈரானின் கேந்திரோபாய நட்பு நாடுகள் அல்ல. இந்த இரு வல்லரசுகளும் ஈரானுக்குத் தேவையான நேரங்களில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் தமது இரத்து(வீட்டோ) அதிகாரங்களைப் பாவித்தது இல்லை. உலக அரங்கில் ஈரான் ஒரு தனித்து நிற்கும் நாடாகும்.

ஈரானின் பாது காப்புச் செலவீனத்திலும் பார்க்க சவுதியின் பாதுகாப்புச் செலவீனம் நான்கு மடங்கானது. ஈரான் தனது படைக்கலன்களில் பெரும் பகுதியைத் தானே உற்பத்தி செய்கின்றது. அவற்றை அவ்வப்போது லெபனானிலும் காசா நிலப்பரப்பிலும் பரீட்சித்து வருகின்றது. சவுதி அரேபியா, ஐக்கிய அமீரகம், கட்டார் போன்ற செல்வம் மிகுந்த அரபு நாடுகள் அரபு நாடல்லாத ஈரான் அரபு நாட்டில் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்காது. ஈரானின் பிராந்திய ஆதிகக் கனவை உணர்ந்த ஐக்கிய அமெரிக்கா அதைச் சுற்றி தனது பல படைத்தளங்களை

---

# தாஜுதீன் கொலை...

( 08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மரணம் என்றே பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

ஆயினும், அதனை பலரும் ஏற்றுக்கொள்ள வில்லை. வஸீம் தாஜுதீனின் மரணம் கொலையாகத் தான் இருக்கக் கூடும் என சந்தேகித்தனர்.

இந்த நிலையில் தாஜுதீ னின் மரணம் ஒரு கொலையாக இருக்கக் கூடும் என்பதற்கான எளிமையான சில காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

அவற்றை நோக்குவோமானால், விபத்து இடம்பெற்றதாகக் கூறப்பட்ட பிரதேசம் சன நடமாட்டம் அற்ற ஒரு பிரதேசமாகும்.

தாஜுதீன் நாரஹேன்பிட்டியாவிலுள்ள நண்பர் ஒருவரின் வீட்டுக்கு விருந்துக்கு செல்வதாக கூறியே சென்றுள்ளார்.

விபத்து இடம்பெற்றதும் நாரஹேன்பிட்டியாவில் தான். அதாவது அந்த இடத்தை சென்றடைவதற்கு நீண்ட நேரம் எடுக்காது.

அதுமட்டுமின்றி, வாகனம் வீதியை விட்டு விலகி மதிலில் மோதியுள்ளதால் விபத்து இடம்பெற்றிருக்கின்றது என்று சோடித்துக்காட்டினார்கள்.

எனவே அவ்வாறு இருந்திருந்தால் அது மிகப்பெரிய விபத்தாக இருந்திருக்க வேண்டும் என்பதுடன், மதிலில் பெரும் பகுதி இடிந்திருக்கவும் வேண்டும். எனினும், அப்படி பெரிய சேதம் எதுவும் மதிலுக்கு ஏற்பட்டிருக்கவில்லை. சிறியதொரு சேதமே மதிலில் ஏற்பட்டிருந்தது.

அடுத்த மிக முக்கிய காரணம் றக்பி வீரர் வஸீம் தாஜுதீனின் பணப்பை (Purse) கிருலப்பனை பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டது.

ஆனால், நாரஹேன்பிட்டிய பகுதியில் தான் தாஜுதீனின் கார் விபத்துக்குள்ளாகியது என்று கூறப்பட்டது. அப்படியிருக்கையில் அவருடைய பணப்பை (Purse) அவருடைய காருக்குள்ளேயோ அல்லது காற்சட்டை பையிலோ இருந்திருக்க வேண்டும்.

எனினும், அவ்வாறு இருக்காமல் பணப்பை கிருலப்பனை பகுதியில் கிடந்தது எப்படி? என்று சந்தேகம் வலுவாக எழுந்திருந்தது.

எனவே அது தொடர்பாக சீ.சீ.டி.வி கமரா பதிவுகளைக் கொண்டு விசாரணைகளை மேற்கொண்டிருக்க முடியும். ஆயினும் அன்றைய சூழ்நிலையில் விசாரணைகள் அனைத்துமே முடக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன.

அதுமட்டுமின்றி, கார் தீப்பற்றி எரியும் போது தீயிலிருந்து தன்னை காப்பாற்றிக்கொள்ள தாஜுதீன் ஏன் முயற்சி செய்யவில்லை? ஒரு கார் தீயினால் எரிவதற்கும் அது மிகப் பெரிய விபத்தாகவிருக்க வேண்டும் என்பதுடன் கார் முழுமையாக எரிவதற்கும் நீண்ட நேரம் எடுத்திருக்கும்.

எனவே வஸீம் தாஜுதீன் போன்ற மிகச் சிறந்த திறமையான விளையாட்டு வீரர் அதிலிருந்து தப்பிச் செல்ல பலவாறு முயற்சித்திருக்க வேண்டும். எனினும் அவர் ஏன்? அதிலிருந்து தப்பிச் செல்ல முயற்சிக்கவில்லை?

எனவே, தாஜுதீன் சாரதி ஆசனத்தில் இருந்தது தீயில் விபத்துக்குள்ளாகி உயிரிழந்தாரா? அல்லது கொலை செய்யப்பட்டபின் அவரது சடலம் காருக்குள் போட்டு எரியூட்டப்பட்டதா? என்ற கேள்விகள் எழுப்பப்பட்டன?

சம்பவம் இடம்பெற்ற இரண்டு நாள்களுக்கு பின்னர் மே மாதம் 18 ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிவான் நிஷாந்த பீரிஸ் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றத்தில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருந்தார்.

எனினும், அந்த அறிக்கை வெளிவருவதிலும் தாமதம் ஏற்பட்டிருந்தது. எனவே தாஜுதீனுடைய மரணம் நடைபெற்று 3 வருடங்கள் கழிந்த இன்றைய நிலையில் தான் அவருடைய மரணத்தில் மறைந்துள்ள பல திகிலூட்டும் உண்மைகள் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன.

தாஜுதீனுடைய மரணம் தொடர்பான அறிக்கையில் வாகனத்தில் தீ பற்றியதில் அவர் உயிரிழந்திருந்தால் அவரது சுவாசப்பையில் காபன்மொனொக்சைட், சாம்பல் போன்றன கலந்திருக்க வேண்டும்.

ஆயினும், அவரது சுவாசப்பையில் அவ்வாறு எதுவும் கலந்திருக்கவில்லை.ஆகையால், கடுமையான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் தான் தாஜுதீன் உயிரிழந்திருக்க வேண்டும் என வைத்திய அதிகாரிகள் சந்தேகிப்பதாக தெரியவருகின்றது.

எனவே, இது தொடர்பான விசாரணைகளை தற்போது பல்வேறு ஆதாரங்களுடன் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தான் வஸீம் தாஜுதீனுடைய சடலத்தை மீளப் பரிசோதனைக்காக தோண்டி எடுப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரி புதுக்கடை 3 ஆம் இலக்க நீதிமன்ற நீதிவான் நிஸாந்த பீரிஸுக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் எழுத்து மூலம் அறிக்கையொன்றினை சமர்ப்பித்திருந்தனர்.

அதற்கமைய புதைக்கப்பட்ட தாஜுதீனுடைய சடலம் மீள் பரிசோதனைகளுக்காக தெஹிவளை ஜும் ஆ பள்ளிவாசல் மையவாடியிலிருந்து கடந்த 10 ஆம் திகதி தோண்டியெடுக்கப்பட்டு, மேலதிக பரிசோதனைகளுக் காக கொழும்பு சட்ட வைத்திய மற்றும் உடற்கூற்று நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி கடுமையான பொலிஸ் பாதுகாப் புக்கு மத்தியில் காலை 7.45 மணியளவில் தாஜுதீனுடைய உறவினர்களாலும், தெஹிவளை ஜும் ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தினராலும் எவ்வித சந்தேகமுமின்றி அவரது சடலம் புதைக்கப்பட்ட இடம் அடையாளம் காட்டப்பட்டதை தொடர்ந்து சடலத்தை தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இதில் தெஹிவளை ஜும் ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தினரிடமும், தாஜுதீனுடைய சகோதரியிடமும், சகோதரனிடமும் வாக்குமூலங்கள் பதிவு செய்து கொண்டனர்.

தாஜுதீனுடைய சகோதரியிடமும், சகோதரனிடமும் பெற்றுக்கொண்ட வாக்குமூலத்தில் தாம் தாஜுதீனுடைய சடலத்தை அடக்கம் செய்து விட்டு வேப்பம் மரம் ஒன்றினையும் வேறு சில பூச்செடிகளையும் நட்டதாகவும் அதனடிப்படையிலேயே தாஜுதீன் புதைக்கப்பட்ட இடத்தை தம்மால் அடையாளம் காட்டக் கூடியதாகவிருந்தது என்றும் கூறியிருந்தனர்.

எனவே குறித்த இடத்தில் நடப்பட்ட வேப்பமரம் 12 அடி வளர்ந்திருந்த நிலையில் அதை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தி சடலத்தை தோண்டியெடுக்கும் பணியை ஆரம்பித்திருந்தனர்.

சடலம் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து 3 அல்லது 4 அடி தோண்டி செல்லும் போதே பொலித்தீன் மற்றும் வெள்ளைதுணியினால் போர்த்தப்பட்ட நிலையில் சடலம் குழியிலிருந்து எடுக்கப்பட்டது.

அதன்பின், கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி அஜித் தென்னகோன் தாஜுதீனுடைய சடலத்தை மீள் பரிசோதனைகளுக்காக பொறுப்பேற்றுக்கொண்டார்.

அதுமட்டுமின்றி அது தொடர்பான வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இந்தக் கொலையுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் ஊடகங்கள் வாயிலாகவும், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தக் கொலையுடன் முன்னைய ஆட்சி காலத்தில் பாதுகாப்புப்பிரிவினைச் சேர்ந்த சிலர் சம்பந்தப்பட்டிருப்பதாகவும், சமூக சேவை நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட வாகனம் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மேலும் இந்தக் கொலை காதல் விவகாரம் ஒன்றின் காரணமாக ஏற்பட்டதாகவிருக்கலாம் என்றும் அதில் பிரபலமான ஒருவரின் மகனுக்கு தொடர்பு இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

எதுஎவ்வாறாயினும், மண்ணுள் புதைக்கப்பட்ட பிரபல றக்பி வீரர் வஸீம் தாஜுதீனுடைய சடலம் மீள் பரிசோதனைகளுக்காக தோண்டியெடுக்கப்பட்ட இன்றைய நிலையில் அவருடைய மரணம் தொடர்பான விசாரணைகள் எவ்வித பக்கச்சார்பும் இன்றி மேற்கொள்ளப்படுவதுடன், குற்றவாளிகள் யாராகவிருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மனதில் நிறைந்து போயுள்ளது.

# பெண்களின் கடமைகள்



சமூகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடைமைகள் பல இருக்கும். அதிலும் குறிப்பாக பெண்களுக்கென சில விஷேட கடமைகள் உள்ளன. அந்த வகையில் பெண்கள் படைப்பில் மிகவும் உயர்ந்தவர்கள். அவர்கள் அனைவருமே சக்தியின் வடிவங்கள். உலக இயக்கம் பெண்களாலேயே நடைபெற்று நிலை பெறுகிறது. ஒவ்வொரு வெற்றிகரமான ஆணின் வாழ்க்கையின் அடித்தளம் பெண்மையே ஆகும். பெண் ஆணுக்குத் தாயாய், சகோதரியாய், மனைவியாய், மகளாய் இன்னும் பல வகைகளில் உறவு உடையவளாகி நலம் செய்கிறாள்.

சிறந்த பெண்ணொருத்தி ,தான் வாழும் இல்லத்தையே கோவிலாகச் செய்கிறாள். குடும்பம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது குடும்பத் தலைவியின் கையில்தான் இருக்கிறது. கணவனையும், கணவன் வீட்டாரையும் புரிந்து கொண்டு அதற்கேற்ப தன்னை அமைத்துக் கொள்ளும் பெண் ,வாழ்க்கையில் வெற்றி அடைகிறாள். கணவனை எப்பொழுதும் மகிழ்ச்சியாக வைத்திருப்பதோ அல்லது வேதனையில் ஆழ்த்துவதோ மனைவியின் கையில்தான் இருக்கிறது. நல்ல மனைவி எண்ணத்தால் கூட கணவனை விட்டு விலகி இருக்கக் கூடாது. மனித வாழ்வின் மகத்துவம் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வதிலேதான் இருக்கிறது. விட்டுக் கொடுத்தல் எனும் பண்பு குடும்ப வாழ்வுக்கு மிகவும் முக்கியமானது என்பதை மனைவியே உணர வேண்டும். மேலும்,

✝பெண்கள் எப்பொழுதும் பொறுமையுடன் இருக்க வேண்டும்.

✝பெண்கள் தன்னம்பிக்கையுடன் எதையும் சாதிக்கத் துணிவு கொள்ள வேண்டும்.

✝பெண்கள் அதிகாலையில் எழுந்து குளித்து பூசையறையில் திருவிளக்கேற்றி வைக்க வேண்டும்.

✝பெண்கள் இரவில் விளக்கு வைத்தபின்பு அழக்கூடாது.

✝திருமணமான பெண்கள் கைகளில் வளையல் அணியாமல் உணவு பரிமாறக் கூடாது.

✝சுமங்கலிப் பெண்கள் நெற்றியில் குங்குமத் திலகமிட்டுக் கொள்வது அவசியம்.

✝வீட்டுக்கு யாரும் சுமங்கலிகள் வந்தால் மகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன் வெற்றிலை, பாக்கு, பழம், பூ, மஞ்சள் இவற்றுடன் குங்குமமும் கொடுக்க வேண்டும்.

## கத்தரிக்காய்சட்னி



### தேவையான பொருட்கள்:

1. கத்திரிக்காய் - 4 எண்ணம்
2. உருளைக்கிழங்கு - 100 கிராம்
3. வெங்காயம் - 100 கிராம்
4. தக்காளி - 1 எண்ணம்
5. பாசிப்பருப்பு - 2 மேசைக்கரண்டி
6. மஞ்சள் தூள் - 1/4 தேக்கரண்டி
7. மிளகாய் தூள் - 1/2 தேக்கரண்டி
8. புளி - சிறிது
9. பெருங்காயத் தூள் - சிறிது
10. கடுகு - 1/4 தேக்கரண்டி
11. சாம்பார் தூள் - 1/2 தேக்கரண்டி
12. கருவேப்பிலை - சிறிது
13. எண்ணெய் - தேவையான அளவு
14. உப்பு - தேவையான அளவு.

### செய்முறை

1. கத்தரிக்காய், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தக்காளியைச் சிறிய துண்டுகளாக நறுக்கி வைக்கவும்.
2. இலேசான சுடு நீரில் சிறிது நேரம் புளியை ஊற வைத்துப் புளிக்கரைசல் எடுக்கவும்.
3. ஒரு பாத்திரத்தில் 200 மி.லி தண்ணீரில் பாசிப்பருப்பு மற்றும் நறுக்கி வைத்திருக்கும் கத்திரிக்காய், உருளைக்கிழங்கு, தக்காளி சேர்த்து வேக வைக்கவும்.
4. வாணலியில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும், அதில் கடுகு மற்றும் கருவேப்பிலை சேர்த்துத் தாளிக்கவும்.
5. தாளிசத்துடன் மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், பெருங்காயத்தூள் மற்றும் நறுக்கிய வெங்காயம் சிறிது சேர்க்கவும்.
6. புளிச் சாறு மற்றும் சாம்பார் தூள், உப்பு சேர்த்துக் கொதிக்க விடவும்.
7. அத்துடன் வேக வைத்த காய்கறி மற்றும் பாசிப்பருப்பு போன்றவற்றைச் சேர்த்துச் சிறிது நேரத்தில் இறக்கவும்.






# மிருதுவான சருமத்துக்கு...

தேங்காய் எண் ணையில் மஞ்சள்த்தூளை போட்டுக் குழைத்து உடம்புக்குத் தடவி. பயத்தமாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக் கும். தோடம்பழத்தை பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து. பத்து நிமிடம் கழித் து சோப்பு போட்டு கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.

வேப்பிலை, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலை களை காய வைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் வேர்க்குரு வராமல், வெளியில் கறுத்துப் போகாமல் இருக்கும்.

இரவு படுக்கும் முன், அரை மூடி எலுமிச்சம்பழம் சாறுடன் பயற்றம்பருப்பு மாவை கலந்து முகத்தில் தடவிக் கொண்டு பத்து நிமிடம் ஊறிய பிறகு ஐஸ் ஒத்தடம் கொடுக்க முகம் சுத்தமாகும். பருவினால் ஏற்படும் தழும்பும் மறையும்.

அப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தட வினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.

தோல் நீக்கிய ஆப்பிள் பழத்தை நன்றாக மசித்து, அதனுடன் சிறிது தேன், றோஸ் பவுடர் ஆகியவற்றைக் கலந்து, அந்த கலவையை முகத்தில் பூசி சுமார் 1/2 மணி நேரம் ஊற விட்டு, முகத்தை கழுவவும். உங்கள் வறண் ட சருமம் காணாமல் போய்விடும்.

சருமத்துக்கு க்ரீம்கள் பயன்படுத்துவதற்கு, பதிலாக தேங்காய் எண் ணெய் அல்லது கடுகு எண்ணெயை தடவி னால், சருமம் மென்மையாக, ஈரப்பதத்துட ன், சுருக்கமின்றி இருக்கும்.

# பெண் பொன்மொழிகள்

✝பெண் இறைவனின் படைப்புகளில் எல்லாம் அழகானது, மேலானது
- மில்டன்

✝எந்த வீட்டில் பெண்கள் கௌரவமாக நடத்தப்படுகிறார்களோ, அங்கு தேவதைகள் குடியேறும்.
- மனு

✝ஒரு பெண்ணைப் படிக்க வைப்பது ஒரு குடும்பத்தையே படிக்க வைப்பதற்கு நிகரானது
- டிக்கன்ஸ்

✝பெண்ணே மனிதனின் உயர்ந்த ஊக்கங்கள் எல்லாவற்றிற்கும் விளக்கு
- ஜேம்ஸ் எல்லீஸ்

✝உலகத்தின் உன்னதமான பொருள் பரிபூரணம் அடைந்த பெண்ணே
-லவல்

✝அவதூறு நல்ல பெண்ணின் வீட்டு வாசலில் பலமிழந்து மாய்ந்து விடுகிறது.
-ஹீஸ்

✝பெண்ணின் மடியில் இறையன்பு வளர்கிறது
- இக்பால்

✝பெண் இல்லாத் வீடும், வீடில்லாத பெண்ணும் மதிப்பில்லாதவை.
- சைரஸ்

✝வாழ்க்கை எனும் ஆற்றை, கடலைக் கடப்பதற்கு பெண் என்ற படகோ கப்பலோ அவசியம் தேவை.
-கண்டேகர்

**டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.**
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
**குடும்ப மருத்துவர்**



# களைப்பு, பலவீனத்திற்கு உடல்தான் காரணமா?

உடம்பு நல்ல வாட்டசாட்டமாக இருக்கும். இரத்தசோகை, பிரஸர், சீனி வருத்தம் ஏதும் இருக்காது, ஆனாலும் முகத்தில் சோர்வுடன் வருபவர்கள் பலர்.

'உடம்பு பலவீனமாகக் கிடக்கு. களைப்பாக இருக்கு. பலத்திற்கு என்ன சாப்பிடலாம்? என்ன சத்து மா கரைச்சுக் குடிக்கலாம்?' எனக் கேட்பார்கள்.

உடல் ஆரோக்கியமாக இருக்கும் இவர்களுக்கும், ஏன் களைப்பு வருகிறது. ஊட்டக் குறைவுதான் இவர்களது களைப்பிற்குக் காரணமா?

இத்தகைய களைப்பிற்கு பெரும்பாலும் கடுமையான நோய்கள் காரணமாக இருப்பதில்லை. ஒருவரது தவறான பழக்கவழக்கங்களும், ஆரோக்கியமற்ற உணவுமுறைகளும் கூடக் காரணமாக இருக்கலாம்.



**தூக்கக் குறைபாடு**

முக்கிய பிரச்சினை போதிய தூக்கம் கிடைக்காததாக இருக்கக் கூடும். சிவராத்திரி முழிப்புப் போல இரவிரவாக விழிப்பிருந்தால்தான் மறுநாள் களைப்பு வரும் என்றில்லை. உங்களுக்கு தினமும் தேவைப்படும் தூக்கத்தில் ஒருமணி நேரம் குறைந்தால் கூட மறுநாள் சக்தி இழந்தது போன்ற உணர்வு ஏற்படலாம்.

உங்கள் தூக்கம் குறைந்ததற்குக் காரணங்கள் பலவாக இருக்கலாம். உதாரணமாக வேலைப்பழு காரணமாக சரியான நேரத்திற்கு படுக்கைக்குப் போக முடியாதிருக்கலாம்.

படுக்கைக்குப் போனாலும் மனஅழுத்தங்கள் காரணமாக நிம்மதியாகத் தூங்க முடியாது போயிருக்கலாம்.

வயதாகும் போது பலருக்கு குழப்பமற்ற தூக்கம் வராதிருக்கலாம்.

அல்லது வேளையோடு எழுந்திருக்க முடியாதிருக்கலாம்.

காரணம் எதுவாக இருந்தாலும் போதிய தூக்கமின்மை மறுநாள் சோர்வைக் கொண்டுவரும்.

**சோம்பேறி வாழக்கை முறை**

உடலுழைப்பற்ற சோம்போறித்தனமான வாழ்க்கை முறையும் இயலாமையைக் கொண்டு வரும்.



போதிய உடல் உழைப்பு அல்லது உடற்பயிற்சி ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு மிக அவசியமாகும்.

உடற் பயிற்சி செய்வதற்கு நேரமில்லை அல்லது களைப்பாக இருக்கிறது என அதைத் தவிர்ப்பது தவறு. ஏனெனில் பயிற்சி இல்லையேல் உங்கள் உடலாரோக்கியம் கெட்டுவிடும். சிறு வேலை செய்வது கூடக் களைப்பைக் கொண்டுவரும்.

இதைத் தவிர்பதற்கு தினமும் அரை மணிநேரம் ஆயினும் உடலுழைப்பில் ஈடுபடுங்கள். வேகமாக நடக்கலாம், நீந்தலாம், தோட்டத்தில் வேலை செய்யலாம். எதுவானாலும் ஒரேயடியாக 30 நிமிடங்களை ஒதுக்குவது முடியாது எனில் அதனை இரண்டு தடவைகளாகப் பிரித்துச் செய்யுங்கள். உடல் உறுதியானால் களைப்பு வராது.

**போஷாக்கான உணவு**

போஷாக்கான உணவையும், நீராகாரத்தையும் எடுக்காவிட்டால் உங்கள் நாளாந்த வேலைக்கான எரிபொருளை உங்கள் உடல் கொண்டிருக்காது. காலை உணவு முதற்கொண்டு போஷாக்காக எடுக்கப் பழகிக்கொள்ளுங்கள்.

எண்ணெய், 'பட்டர்', 'மார்ஜரீன்' போன்ற கொழுப்புப் பொருட்கள் அதிகமுள்ள உணவுகளைத் தவிருங்கள். நார்ப்பொருட்கள், விற்றமின், தாதுப்பொருட்கள் அதிகமான உணவு வகைகளை தேர்ந்தெடுங்கள். தீட்டாத அரிசி, அரிசிமா, ஆட்டாமா, குரக்கன் போன்றவை நல்லது. பழவகைகளையும் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

**சிறிய உணவுகள்**

இனிப்புச் செறிந்த பழச்சாறுகள், மென்பானங்கள் போன்றவை நல்லதல்ல. பால், உடன் தயாரித்த பழச்சாறு போன்றவை விரும்பத்தக்கவை.

அதிகமாக உண்பதைத் தவிருங்கள். சிறிய உணவுகளாக, அதுவும் கலோரிச் சத்துக் குறைந்த உணவுகளாக உண்ணுங்கள். வேண்டுமானால் 4-5 மணி நேரத்திற்கு ஒரு முறை அவ்வாறான உணவை எடுக்கலாம்.

**மதுபானம்**

மதுபானம் உட்கொள்ளும் போது உற்சாகம் அளிப்பது போலத் தோன்றினாலும் உண்மையில் நரம்பு மண்டலத்தைச் சோர்வுறச் செய்கிறது. உட்கொண்டு பல மணிநேரத்திற்கு ஒருவரைச் சோர்வுறச் செய்யலாம். அத்துடன் படுக்கைக்குச் செல்லமுன் மதுபானம் எடுத்தால் தூக்கத்தைக் கெடுத்து அடுத்த நாளையும் சோர்வுறச் செய்துவிடலாம்.

**நெருக்கீடும் மனப்பதற்றமும்**

ஆயினும் இன்றைய காலகட்டத்தில் பலரின் சோர்விற்கும் களைப்பிற்கும் காரணமாக இருப்பது நெருக்கீடு நிறைந்த வாழ்க்கையும், மனப்பதற்றமும்தான். ஓய்விற்கு நேரமின்றி ஒரு பணியிலிருந்து மற்றொரு வேலைக்கு இடைவெளியின்றி ஓடிக்கொண்டிருப்பவர்களுக்கு களைப்பு ஏற்படவே செய்யும்.

**நேர முகாமைத்துவம்**

மனத்தில் நிறைவும் சந்தோசமும் இருந்தால் களைப்பு நெருங்காது.

(22ஆம் பக்கம் பார்க்க)

# சிம்மசொப்பனம்-36

ஓர் அறைக்குள் அவரை இரகசிய மாக மறைத்து வைத்திருந்தனர். தனக்குக் கிடைத்த தலைமறைவு வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட காஸ்ட்ரோ புத்தகங்களை வாசிக்கத் தொடங் கினார். வெகு விரைவில், அவர் தங்கியிருந்த அறை ஒரு நூலகமாக மாறிப் போனது. பாவம் மிர்தா! தன் மகனோடு தனியாக காலத்தைக் கழித்து வந்தார். மாஃபியா கும்பல் தன் கணவருக்கு குறி வைத்திருப் பதைக் கண்டு நடுநடுங்கிப் போனார். காஸ்ட்ரோவைப் பற்றிய செய்தி கூட அவருக்குத் தெரியவில்லை. எங் காவது மறைந்திருக்கிறரா, கைது செய்யப்பட்டாரா எதுவுமே தெரியாது. வீட்டிலும் நிறையப் பிரச்சினைகள் செலவுகளைச் சமாளிக்க வேண் டும். தன்னுடைய பெற்றோரிடம் உதவி கேட்டால் நிச்சயம் செய் வார்கள். ஆனால் அவர்களிடம் இது பற்றிப் பேச தயக்கம், கூச்சம், தங்கியிருக்கும் அறைக்கு வாடகை கட்டவில்லை. சேமிப்பு என்று எது வும் கிடையாது. காஸ்ட்ரோவின் நண்பர்கள் உதவியால் தான் ஓரள வுக்குச் சமாளிக்க முடிந்தது.. காஸ்ட் ரோவைத் தொடர்ந்து மறை விடத்தில் பாதுகாக்க முடியவில்லை. மஃபியா ஆள்கள் பல இடங்களில் பரவியிருந்தனர். லெஸ்னிக் ஒரு முடிவுக்கு வந்தார். காஸ்ட்ரோவை ஹவானாவில் வைத்திருப்பது ஆபத்து என்பதால் அவரை அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கலாம் என்று முடிவு செய்தார். காஸ்ட்ரோ இதற்குச் சம்மதித் தார். அமெரிக்கா சென்று கொலம்பியா பல்கலைக்கழகத்தில் படிப்பைத் தொடங் கலாம் என்று அவர் நினைத்தார். மற் றொரு ஆசையும் அவருக்கு இருந்தது. நீண்டகாலமாக அவரிடமிருந்து தொட ர்ந்து நழுவிக்கொண்டிருந்த ஆங்கில த்தை எப்படியாவது வசப்படுத்திவிட வேண்டும் என்பதே அது. காஸ்ட்ரேர் படிப்பில் என்னதான் சூரப்புலியாக இருந்தாலும் ஆங்கிலம் மட்டும் அவருக்கு நடுக்கத்தையே கொடுத்தது. அமெரிக் காவில் சில காலம் தங்கியிருந்ததால் சுலபமாக அவர்களுடன் பேசிப்பழகி மொழியைக் கற்றுக் கொள்ளலாம் என்று அவர் நினைத்தார்.

அவரது தந்தையும் சகோதரரும் பயணச் செலவுகளுக்கான பணத்தைக் கொடுத்து உதவினர். காஸ்ட்ரோ அமெரிக்கா சென்றார். ஆனால் அவரது இரண்டு இலட்சியங்களும் நிறைவேறவில்லை. கொலம்பியா பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கவில்லை. ஆங்கிலம் அவரைப் பயமுறுத்தியது. மூன்றே மாதங்களில் மீண்டும் ஹவானா திரும்பினார். மற்றொரு புதிய அறையில் தனது மனைவி மகனுடன் குடி புகுந்தார். முன் பணத்தைக் கொடுத்தது நண்பர்கள் தான்.

(தொடரும்)



## சொற்சிலம்பம் போட்டி இல. 687

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | | | |
| 9 | | 10 | | | | 11 | |
| | | 12 | | | 13 | | |
| | 14 | | | 15 | | | 16 |
| 17 | | | | | | 18 | |
| 19 | | | | 20 | 21 | | |
| 22 | | | 23 | | | | |

**மேலிருந்து கீழ்**

1 - இந்துக்களின் ஒரு பண்டிகை நாள்.
2 - தங்குமிடம்.
3 - ஆயுர்வேத வைத்திய சாத்திரத்தை இப்படிக் கூறுவர்.
4 - உறுதி.
5- சூரியன்.
6 - குளிகை.
10- பிள்ளையார்.
13- வேறுபடுத்து.
14- எல்லை.
15-உழை.
16- தர்மம்.
17- வீதிக்குக் குறுக்கே நீர்பாய்வது இதன் வழியாக.
18- ஒரு நட்சத்திரம்.
21- இணங்க.

**இடமிருந்து வலம்**

1 - மிதவாதம் தாண்டி, மிக ஆக்ரோஷமாகச் செயற்படுபவன்.
5- திரவப் பொருள் சூடாகும் போது இந்த நிலையை அடைகிறது.
7- பாடலை இசை.
8- வெளியே தெரியாமல் ஒன்றை எடுத்துச் செல்லுதல்.
9 -வாழ்க்கைப் பிரதேசம்.
11 - ஒன்றைப் பிடிக்கப் பின்னுவது.
12- நாங்கள்.
13 -முன் அல்ல.
14 -கழித்தல் குறி.
15- பிழை அல்ல.
17- நவ மணிகளில் ஒன்று.
18- நிலைவிலிருந்து அகற்று.
19- அழித்து இல்லாமல் செய்.
20- சாதகமானது அல்ல.
22- குத்து விழுந்தால் இப்படித்தான் இருக்கும்.
23- தேவைக்கு மேலானது

அனுப்புபவர் பெயர்:-----------------------------------
விலாசம்:-----------------------------------
-----------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### சொ. சி. போட்டி இல 687

■ சொற்சிலம்பம் போட்டி 687ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 09 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றிபெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, செப்ரெம்பர் 16 மற்றும் செப்ரெம்பர் 23.ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

பாசுககுாமயாராகத மதாநபதடுக கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ள லாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

**செல்வி தட்சிகா தருமராஜா,**
இல 43,கலைவாணி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

**இ.விஜயசிறி.**
4ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை.

திருமதி. து. வற்சலா,
ஆழ்வாண் கிணற்றடி,
பன்னாலை,
தெல்லிப்பளை.

சி.கிஷ்ணவேள்,
'வசந்தபவனம்',
மருதடி மேற்கு,
சாவகச்சேரி.

ஞா.இம்மானுவேல்,
இல 85/4, கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

### போட்டி இல 684இல் பரிசு பெற்றோர்

1
கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை

2
ஸ்ரீலக்ஷன்,
ஆண்டு 08 D,
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்

3
க. கௌரிதேவி,
வட்டு.கிழக்கு,
வட்டுக்கோட்டை.

### சொற்சிலம்பப் போட்டி 685இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.பஞ்சமி.
2.சகலம்.
3.பூரம்.
4.தடி.
5.தலைவிதி.
7.கருத்து.
9.பதகளி.
10.அருந்துதல்.
12.பலகை.
14.மார்பு.
15.கைகுவி.
17.நடுகை.
20.கலி

**இடமிருந்து வலம்**

1.பஞ்சபூதம்.
6.கரடி.
7.கலை.
8.சபலம்.
10.அருவி.
11.மிதம்.
12.பருத்தி.
13.கலந்து.
14.மாளிகை.
16.கைது.
18.குடை.
19.தகடு.
21.புரவி.
22.மல்லிகை

## எதற்காக சிரித்தார் அவர்?

கிரேக்க நாட்டில் மீசோ என்ற அறிஞர் இருந்தார். அவர் உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்து வந்தார்.

அவருக்குப் பிடிக்காத, அவரால் ஏற்றுக் கொள்ள முடியாத கருத்துக்களை யாராவது பேசினால் அவர் கோபப்பட மாட்டார். சிரிப்பார். சிரித்துச் சிரித்தே அந்தச் சூழ்நிலையை மறப்பார்.

ஒருநாள் அவருடைய மாணவன், ஐயா! உங்களுடன் யாரேனும் பேசும் போது சில சமயங்களில் நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள்? என்று கேட்டான்.

அதற்கு மீசோ, அறிவற்ற பேச்சுக்களைக் கேட்கும் விதி எனக்கு நேர்ந்து விட்டதே என்று என்னைப் பார்த்து நானே சிரித்துக் கொள்கிறேன். அவ்வளவுதான் என்று பதில் தந்தார்.

## வர்ணம் தீட்டலாம்



## எலிக்கு வந்த சந்தேகம்



ஒரு நாள் எலி ஒன்றைப் பூனை ஒன்று துரத்த... தன் உயிரைக் காத்துக்கொள்ள எலி வேகமாகத் தன் வளைக்குள் புகுந்தது. எலியைக் காணாத பூனை திரும்பிச் சென்றது. வெளியே வந்த எலி நத்தை ஒன்று மெதுவாக ஊர்ந்து செல்வதைப் பார்த்தது.

நத்தையை கேலி செய்த எலி, நத்தையே உன் முதுகில் வீட்டைச் சுமந்து செல்கிறாயே... நான் எவ்வளவு வேகமாக ஓடுகிறேன். அதனால் ஆபத்திலிருந்து என்னால் தப்பிக்க முடிகிறது. எனக்கு வரும் திடீர் ஆபத்தைப் போல் உனக்கு வந்தால், உன்னால் என்ன செய்ய முடியும்? என்று கேட்டது.

அதற்கு நத்தை, எலியே, நீ உயிருக்கு பயந்து வேகமாக ஓட வேண்டும். சில சமயம் பூனையிடம் மாட்டிக் கொண்டால் உன் சாவு நிச்சயம். ஆனால் எனக்கு அந்தப் பயமில்லை... நான் என் பாதுகாப்புக்காக என் கூட்டை முதுகில் சுமந்து செல்கிறேன். எனக்கு ஆபத்து வரும் நேரத்தில் என் உடலை இந்தக் கூட்டுக்குள் இழுத்துக் கொண்டு பாதுகாப்பாக பதுங்கிக் கொள்வேன் என்றது. அப்போதுதான் எலிக்குப் புரிந்தது. நத்தைக்கு அதன் கூடு சுமையல்ல... என்று.



இந்த இரு படங்களுக்கு இடையேஉள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்.

## விடுகதைகள்

1. இதயம் போலத் துடிப்பிருக்கும்
இரவு பகல் விழித்திருக்கும். -அது என்ன?
2. காவி உடை அணியாதக் கள்ளத் தவசி
கரையோரம் கடும் தவம் செய்கிறான் - அவன் யார்?
3. காண உருவம் உண்டு
கட்டிப்பிடிக்கத்தான் உடல் இல்லை -அது என்ன?
4. வீதியெல்லாம் கூட வந்தாலும்
வீட்டுக்குள் இவனைச் சேர்ப்பதில்லை - அவன் யார்?
5. காய் காய்க்கும். ஆனால்
பழம் பழுக்காத மரம் இது. - அது என்ன?
6. மண்ணுக்குள் முளைக்கும்
மங்கையருக்கு மட்டும் அழகு தரும். -அது என்ன?
7. விதையில்லாத செடி இது மழையில் பிறந்து
வெயிலில் காயுது. - அது என்ன?
8. இரவல் கிடைக்காதது
இரவில் மட்டும்தான் வரும். -அது என்ன?
9. பறந்து போகும் விமானம் அல்ல
படீரென வெடிக்கும் பட்டாசும் அல்ல. -அது என்ன?
10. குழந்தைக்குப் பலமான கையே
இந்தக் கைதான். - அது என்ன?

### விடைகள்

1. கடிகாரம்.
2. கொக்கு.
3. புகை.
4. செருப்பு.
5. முருங்கை மரம்
6. மஞ்சள்.
7. காளான்.
8. தூக்கம்.
9. பலூன்.
10. அழுகை.



## அறிந்து கொள்ளுங்கள்

01. பிளாஸ்டிக்குகளை எரிக்கும் பொழுது டையாக்சின் என்ற நச்சுப் புகை வெளியாகிறது.
02. பாம்பு நாக்கின் மூலம் வாசனையை உணர்கிறது.
03. காண்டா மிருகத்தின் கொம்புகள் உண்மையில் எலும்புகள் அல்ல. அவை மிகக் கடினமான மயிரிழைகளால் உருவானவை.
04. கடுமையான வெப்பத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ள .நீர் யானையின் தோலில் ஒருவித இளஞ்சிகப்பு நிறத்தாலான திரவம் சுரந்து, குளிர்ச்சியைக் கொடுக்கிறது.
05. உண்ணி எனப்படும் தெள்ளுப்பூச்சி, ஓராண்டு வரையிலும் கூட பனிக்கட்டியினுள் உயிருடன் இருந்து, ஐஸ் கரைந்தபின் வெளிவரும் ஆற்றல் கொண்டது.
06. உலகிலேயே உயரமான சிகரம் எவரெஸ்ட். இதன் உயரம் 8848 மீற்றர்கள்.
'07. திரை அரங்குகளே இல்லாத நாடு பூட்டான்.
08. உலகிலேயே துணியில் செய்திதாள் வெளியிடும் நாடு ஸ்பெயின்.
09. அஞ்சல் தலையில் தனது நாட்டின் பெயரைக் கொண்டிராத நாடு ஐக்கிய இராஜ்ஜியம்.
10. உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம் முதலை. இவை 300 ஆண்டுகள் வரை வாழுகின்றன.

## இல்லவே இல்லாத நாடுகள்

1) திரையரங்குகள் இல்லாத நாடு
- பூட்டான்
2) தினசரி பத்திரிகைகள் இல்லாத நாடு
- காம்பியா
3) காகங்கள் இல்லாத நாடு
- நியூசிலாந்து
4) ரயில் இல்லாத நாடு
- ஆப்கானிஸ்தான்
5) பாம்புகள் இல்லாத நாடு
- அயர்லாந்து
6) உத்தியோகபூர்வ தலைநகரம் இல்லாத நாடு
- நவ்ரு
7) தனக்கென தாய்மொழி இல்லாத நாடு
-சுவிட்சர்லாந்து
8) பொதுக்கழிப்பறைகள் இல்லாத நாடு
-பெரு
9) வாடகைக்கார்கள் இல்லாத நாடு
- பெர்முடாவா





இந்தபசுவிற்கு நான் தான்
அம்மா என்றது.
இந்தப்பசு எப்போதும்
பால்தருமென்றது.
பசுவின் கன்றுக்கு
தன் மொழி புரியுமென்றது.
பசுவைக் கட்டிக்கொண்டே
உறங்குவேன் என்றது
கோணலாய் இருப்பினும்
குழந்தையின்
உலகிலிருக்கும்
ஓவியப்பசு
அழகாய்த்
தானிருக்கிறது.

இவ்வார

# இராசி பலன்

**26.08.2015 -01.09.2015**

### மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். திட்டமிட்டபடி, புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படும். புத்திரர்களின் செயல்பாடு கண்டு பெருமை கொள்வீர்கள். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

தடை நீங்கி முன்னேற்றம் வாழ்வில் உருவாகும். கடந்தகால உழைப்பின் பயனைத் தற்போது அனுபவிப்பீர்கள். குடும்பத்தினர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். நண்பர்களுடன் சுற்றுலா செல்ல வாய்ப்புண்டு. புத்திரருடன் கருத்து பேதம் ஏற்படலாம் கவனம். மனைவியின் ஆலோசனையை ஏற்பது முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். பணியாளர்கள் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு பணி இலக்கை எட்டிப் பிடிப்பர்.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

புத்திரர், உங்கள் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பர். மறைமுக எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் விலகிச் செல்வர். மனைவியின் அன்பைக் கண்டு மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் சீர்திருத்தத்தில் ஈடுபடுவீர்கள். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்களுக்கு சமூகத்தில் மரியாதை கூடும். மாணவர்கள் பெற்றோரின் மனம் மகிழும் விதத்தில் படிப்பர்.

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றுவது நல்லது. தாயின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். நல்லவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். புத்திரரின் செயல்பாட்டை தக்க அறிவுரை கூறி நல்வழிப்படுத்துவீர்கள். ஒவ்வாத உணவுகளை தவிர்ப்பது நல்லது. மனைவியின் கருத்துக்கு மதிப்பு அளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும்.

### சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

தான, தர்மத்தில் மனம் ஈடுபடும். வெளியூர் பயணம் பயனறிந்து மேற்கொள்வது நல்லது. புத்திரர்களின் செயல்பாடு கண்டு மனம் மகிழ்வீர்கள். மறைமுக எதிரிகளின் தொல்லை மறையும். மனைவி விரும்பிய பொருட்களை வாங்கித் தருவீர்கள். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

உறவினர்களிடம் கருத்து வேறுபாடு மறைந்து நிம்மதி பிறக்கும். குடும்பத்தில், சுப விஷயம் குறித்த பேச்சு அடிக்கடி நடந்தேறும். வாகனத்தில் மிதவேகத்தைக் கடைபிடிப்பது நல்லது. புத்திரரின் வளர்ச்சிக்குத் துணைபுரிவீர்கள். பணியாளர் விண்ணப்பித்த கடனுதவி பெறுவதில் தாமதம் உண்டாகும். பெண்கள் உறவினர்களுடன் சுற்றுலா செல்வர். மாணவர்கள் படிப்பில் சாதனை படைக்க முயல்வர்.

### துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

அரசு சார்ந்த நன்மை பெறுவீர்கள். புத்திரரின் எதிர்கால நலனுக்காக முயற்சியில் ஈடுபடுவீர்கள். உடல்நிலை ஆரோக்கியமாக இருக்கும். மனைவி வழி உறவினர்களுடன் நெருக்கம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், ஆதாயமும் உண்டாகும். பணியாளர்கள், பணி விஷயமாக அடிக்கடி வெளியூர் செல்ல நேரிடும். பெண்கள் அடிக்கடி விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

### விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

மற்றவர் குடும்ப விஷயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். வீடு, வாகன பாதுகாப்பில் கவனம் தேவை. புத்திரர்கள், உங்களின் சொல்லுக்கு மதிப்பு கொடுப்பர். எதிரிகள் பலமிழந்து போவர். மனைவியின் கவனக்குறைவால் சிரமத்திற்கு ஆளாக நேரிடும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் போட்டிகளில் பங்கேற்று வெற்றி காண்பர்.

### தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வாகன பயணத்தின் மூலம், இனிய அனுபவம் காண்பீர்கள். புத்திரரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். விருந்து, விழாவில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். மனைவி வழி உறவினர்களுடன் இணக்கம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் படிப்படியாக லாபம் உயரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் நிம்மதியான வாழ்வு நடத்துவர். மாணவர்கள் கல்வியில் மேம்படுவர்.

### மகரம்

**திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

கடந்த கால நற்செயலுக்கு, உரிய பலன் தேடி வரும். வாகனப் போக்குவரத்தில் மிதவேகம் கடைபிடிப்பது நல்லது. புத்திரர் படிப்பு, வேலையில் நல்ல முன்னேற்றம் காண்பர். எதிர்ப்பாளரின் கெடு செயல் பலமிழக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். பெண்கள் குழந்தைகளின் வளர்ச்சி கண்டு மகிழ்வர்.

### கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

பணிகளில் நேர்த்தி மிகுந்திருக்கும். புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை காண்பீர்கள். வீட்டுத்தேவைகளை ஆடம்பர முறையில் நிறைவேற்றுவீர்கள். புத்திரர்களின் செயல்பாடு கண்டு பெருமிதம் கொள்வீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் கருத்துக்கு மதிப்பளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைவதால், லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் புதிய தொழில் நுட்பங்களை ஆர்வமுடன் கற்பர்.

### மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

குடும்பச் செலவுக்காக கடன் வாங்க நேரிடும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. மனைவியின் செயல்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர் பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள் அடுத்தவர் குடும்ப விஷயத்தில் தலையிடுவதை தவிர்க்கவும். மாணவர்கள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவர்.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 100



பிரபாகரனும் அவருடைய அணியும் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரப்படுவதாக அவரிடம் அங்கே கூறப்பட்டது. அவர்களோடு சேர்ந்து பாலாவும் சென்னை விமான நிலையத்தில் இருந்து புதுடில்லிக்கு அரசியல் கலந்தாலோசனைக் காகச் செல்ல வேண்டும் என்று அவருக்கு அங்கு கூறப்பட்டது. பிரபாகரனுடைய அணியில் யோகியும், யாழ்ப்பாண அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீபனும் இருந்தனர். புதுடில்லியில் இருந்து பாலா எனக்குத் தகவல் தந்தார். இந்திய -இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை ஒன்றிலே புதிய யோசனைகள் தங்களுடைய அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப் பட்டிருப்பதாக தெரிவித்தார். விடுதலைப்புலிகளின் பார்வையிலே அந்த உடன்படிக்கை ஏற்க முடியாத ஒன்று என்றும் கூறினார். தாம் தங்கியிருந்த பயணிகள் விடுதி அறைக்குள்ளேயே தமது நடமாட்டம் முடக்கப்பட்டிருப்பதாகவும், கரும்பூனை அதிரடிப் படையினரால் தாம் சூழப்பட்டிருப்பதாகவும் பாலா அறிவித்தார்.யோகரத்தினம் யோகியின் கருத்து வெளிப்படையாகவே இருந்தது. தமது அணியினர் அச்சுறுத்தப்படுவதாகவும், தாம் வீட்டு மறியலில் வைக்கப்பட்டி ருப்பதாகவும் யோகி கூறினார். தொலைபேசியில் அவருடைய சீற்றம் தெரிந்தது. தங்கியிருந்த விடுதியில் இருந்து வெளியே தொலை பேசித் தொடர்பு கட்டுப்படுத்தப்படுவதாகவும், அது காரணமாக சிறிது காலத்துக்கேனும் பாலாவிடமிருந்து தொடர்பு எதுவும் கிடைக்காமல் போகலாம் என்றும் அவர் கூறினார். புதுடில்லியில் இருந்து சில நாள் கழித்து அவர்கள் சென்னை மீண்ட போது புதுடில்லியில் தாங்கள் நடத்திய பேச்சுவார்த்தை பற்றியே பாலா ஆழமாக சிந்தித்துக் கொண்டிருந்தார். ஜெயவர்த்தனாவுக்கும், ரஜீவுக்கும் இடையே கைச்சாத்தாக இருந்த ஒப்பந்தம் தொடர்பாகத் தமது ஆழமான நம்பிக்கையீனத்தை பாலா வெளியிட்டார். புதுடில்லியிலே விடுதலைப் புலிகளின் அணி, கடுமையான நெருக்குவாரத்துக்கு உள்ளாக் கப்பட்டிருப்பதாக என்னிடம் அவர் ஒப்புக் கொண்டார். வெளித் தொடர்பு துண்டிக்கப்பட்டு, பலத்த பாதுகாப்புடன் விடுதி அறைகளில் அவர்கள் விடப்பட்டிருந்தார்கள். ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தையும் படித்துப் பார்த்துப் தங்கள் ஒப்புதலை வழங்க, சில மணி நேர அவகாசமே அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஒப்பந்தத்துக்கு விடுதலைப்புலி அணி ஒப்புதல் அளிக்க மறுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறீலங்காவுக்கான இந்தியத் தூதுவர் டிக்சிற், அச்சுறுத்தியிருந்தார். விடுதலைப்புலிகள் ஒப்பந்தத்தை ஏற்றால் என்ன? நிராகரித்தால் என்ன? அது கைச்சாத்திடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் நிர்தாட்சண்யமாகக் கூறியிருந்தார். டிக்சிற் அவர்களுடைய வரம்பு மீறிய, அடாவடித்தனமான இராஜதந்திர அணுகுமுறை குறித்து பிரபாகரனும் , பாலாவும் சினமடைந்திருந்தார்கள். தமிழ் மக்களின் அரசியல் வேணாவை அந்த ஒப்பந்தம் சிறிதேனும் நிறை வேற்றா ததால் விடுதலைப்புலிகளோ, ஈழத்தமிழ் மக்களோ, அதை ஏற்கமாட் டார்கள் என்று இந்திய இராஜதந்திரியிடம் விடுதலைப்புலிகளின் தலைவர் திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

(பதிவு தொடரும்)

# தடம் புரளும்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டது. ஆனால் அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பிரகீத்தின் மனைவி தன் கணவன் காணாமற்போன விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்குக் கொண்டு சென்ற போதிலும் கூட இலங்கை அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தற்சமயம் விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் ஒரு இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் இன்னொரு இராணுவ உயரதிகாரி விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, இராணுவத்தலைமைப் பீடம் அவரை ஒப்படைக்க மறுத்து விட்டது. மேலும் இராணுவத்தினர் கொடுத்த அழுத்தங்கள் காரணமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்த விசாரணைகளை உடனடியாக நிறுத்தும் படி உத்தரவிட்டுள்ளதாக அந்தச் சிங்கள ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால் இராணுவத்தினர் மத்தியில் குழப்பங்கள் ஏற்படக் கூடும் என இராணுவ உயர் மட்டம் எச்சரித்த காரணத்தாலேயே பிரதமரால் இந்த விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இடம்பெற்ற விசாரணைகளின் போது பிரகீத் காணாமல் போனது தொடர்பாகப் பல புலனாய்வு அதிகாரிகளுக்கும், இராணுவ



அதிகாரிகளுக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. போரின் போது உருவாக்கப்பட்ட இந்தச் சிறப்பு இராணுவப் புலனாய்வுப் பிரிவு இப்படியான பல சம்பவங்களில் ஈடுபட்டதாக தெரிய வந்துள்ளது. போரின் பின்பு இது முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் செயற்பட்டதாகவும் அவரின் கீழ் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரியா, பிரிகேடியர் வன்னியாராட்சி ஆகியோர் செயற்பட்டதாகவும் தெரியவருகிறது.

எனவே பிரகீத் தொடர்பான விசாரணை முன்னெடுக்கப்பட்டால் இந்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் பல நடவடிக்கைகள் வெளிவருமாதலால் இராணுவம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. அவர்களின் கோரிக்கைக்கு உட்பட்டு விசாரணைகள் பிரதமரால் நிறுத்தப்பட்டு விட்டதாக ஊடகம் தெரிவித்துள்ளது.

இதிலிருந்து இலங்கையில் இடம்பெறும் நீதி விசாரணைகளில் இராணுவ அழுத்தங்கள் மேலாதிக்கம் வகிக்க முடியும் என்பதைத் தெளிவாகவே புரிந்து கொள்ள முடிகிறது.

இந்த நிலையில், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான உள்ளக விசாரணைகள் எப்படி சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடக்க முடியும்?

எனவே உள்ளக விசாரணைகள் என்பன தடம்புரண்டே இடம்பெறும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. எனவே தான் தமிழ் மக்கள் சர்வதேச விசாரணையைக் கோரி வருகின்றனர்.

# களைப்பு...

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தவிர்ப்பதற்கு நேர முகாமைத்துவம் முக்கியமானதாகும்.

• செய்து முடிப்பதற்கு சிரமமான பணிகளை பொறுப்பு ஏற்றுக் கொள்ளாதீர்கள்.

முக்கிய வேலை களுக்கு முன்னுரிமை கொடுத்து நிறைவு செய்யுங்கள். குழப்பங்கள் ஏற்படாமல் பணிகளை ஒழுங்கு முறையில் செய்து முடிக்க திட்டமிட்டுச் செயலாற்றுங்கள்.

பணிகளின் இடைவெளிகளில் சற்று நிதானித்து மூச்சுவிட்டுக் களைப்பாறுங்கள்.

தினசரிக் கடமைகளுக்கு மேலாக உங்களை மகிழ்வுறுத்தும் பொழுதுபோக்கில் அல்லது விளையாட்டில் ஈடுபடுங்கள்.

மதிய உணவின் பின் மீதி வேலைகளைத் தொடங்கு முன் முடியுமானால் குட்டித் தூக்கம் செய்யுங்கள். அல்லது சற்றுக் காலாற உலாவுங்கள்.

அவசியமானால் காலையில் 15 நிமிடங்கள் முன்னதாகவே படுக்கை விட்டெழுந்து நாளாந்தக் கடமைகளை ஆரம்பியுங்கள்.

### வேலைத்தள நெருக்கடி

உங்கள் வேலைத்தளத்திலும் களைப்பு ஏற்படுகிறது எனில் அது உங்கள் தொழில் சார்ந்ததாக இருக்கக் கூடும். நெருக்கடி மிக்க வேலையாக இருக்கலாம். அல்லது தொழிலில் அதிருப்தி அல்லது ஈடுபாடு குறைந்த வேலையாகவும் இருக்கலாம். திறந்த மனத்தோடு சுயமதிப்பீடு செய்து நிவர்த்தி செய்வது அவசியம்.

### சகஊழியர்களுடன் நல் உறவு

சகஊழியர்களுடன் நல் உறவை வளர்த்துக் கொள்ளுங்கள். அவர்களுடனான உறவில் ஏதாவது உரசல் அல்லது நெருக்கடி இருந்தால் அதனைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை கொடுங்கள்.

### மேலதிகாரியுடனான உறவு

உங்கள் மேலதிகாரியுடனான உறவைப் பலப்படுத்துங்கள்.

அவர் உங்களிடம் எதனை எதிர் பார்க்கிறார் என்பதைத் தெளிவாகப் புரிந்து செயற்படுங்கள்.

உங்கள் திறமைகளின் எல்லைகளைப் புரிந்து கொள்ளுங்கள். தொழில் சார்ந்த உங்கள் பலவீனங்களை திறந்த மனத்தோடு ஏற்றுக்கொண்டு அதனை நிவர்த்தி செய்ய முயலுங்கள்.

### மருந்துகள்

வேறு நோய்களுக்காக நீங்கள் உபயோகிக்கும் மருந்துகளும் களைப்பிற்குக் காரணமாகலாம். உதாரணமாக தடிமன் தும்மலுக்கு உபயோகிக்கும் 'பிரிட்டோன்', 'செட்ரிசின்' போன்ற தூக்க மருந்துகள், 'பிரஸ'ருக்கு உபயோகிக்கும் 'பீட்டா புளக்கர்' மருந்துகளும் காரணமாகலாம். இருமலுக்கு உபயோகிக்கும் மருந்துகளில் உள்ள 'கொடேன்' போன்ற வேறு பல மருந்துகளையும் சொல்லலாம்.

### 'டொனிக்', சத்துமா, விற்றமின்

எனவே களைப்பு என்றவுடன் சத்து மருந்துகள், 'டொனிக்', சத்துமா, விற்றமின் மருந்து ஊசி எனத் தேடி அலையாமல் காரணத்தைக் கண்டு அதனை நீக்க முயலுங்கள்.

உங்களால் முடியாவிட்டால் உங்கள் மருத்துவரை நாடுங்கள்.

# உங்கள்...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகளின் செயல்முறை அட்டவணை தயாரித்துக் கொள்ளுங்கள்.

குழந்தையின் வளமான எதிர்காலத்திற்கு அடிப்படையாக அமைவது அதன் நடவடிக்கைகள் தான். சின்னச் சின்னச் செங்கல்கள் ஒன்றாகச் சேர்ந்து பிரம்மாண்டமான கட்டடத்தை எழுப்புகிறது. அதைப் போலவே குழந்தையின் சின்னச் சின்னச் செயல்கள் தான் எதிர்காலத்தை எழுப்பும் அஸ்திவாரமாக அமைகின்றன. இதை மனதில் கொண்டு ஒரு வார காலத்திற்கு உங்கள் குழந்தையின் செயல்பாடுகளை உற்று நோக்கி குறிப்பேட்டில் குறித்து வாருங்கள். அந்த குறிப்பில் நீங்கள் அவர்களிடம் கண்ட நல்ல நடத்தைகள், அவர்களின் செயல்திறன், எந்த வேலையில் ஆர்வம் அதிகம் காட்டுகிறார்கள், எந்த வேலையைச் செய்ய முகம் சுளிக்கிறார்கள், என்பதை எல்லாம் ஒன்று விடாமல் குறிக்க வேண்டும். நீங்கள் நல்ல நடத்தை என்று எண்ணுவதையும், கெட்ட நடத்தை என்று எண்ணுவதையும் இரண்டு பகுதிகளாக பிரித்து அதன் கீழ் குறித்து வரவேண்டும்.

இந்த அட்டவணையில் உங்கள் குழந்தையின் மனவெழுச்சி, உற்சாகம், பயம், உடல் நலம், சேவை மனப்பான்மை, அறிவுத்திறன், சமூக அக்கறை , உடல்வலு போன்ற பலதரப்பட்ட அம்சங்களின் அடிப்படையில் அவர்கள் செயல்கள் அமைந்திருப்பது ஒருவார காலத்திற்குப் பிறகு தெரிய வரும். உங்கள் செல்லப்பெண் எதற்காக மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்? உங்கள் மகனின் நடத்தையில் ஆசிரியரை எரிச்சல் ஊட்டிய செயல் எது? வீட்டில் இருப்பவர்களிடம் அவன் பாசமாக இருப்பதை காட்டும் நிகழ்ச்சி எது? உங்கள் குட்டிப்பெண் செய்த எந்த செயல் சரியானது? அல்லது மாற்றப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்ற செயல் எது? குழந்தைகள் மிகவும் விரும்பியது எது? மிகவும் வெறுத்தது எது? போன்ற பல செயல்களை அந்த அட்டவணை காட்டும்.

இந்த அட்டவணையைக் காய்தல் உவத்தல் அதாவது விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டு தயார் செய்ய வேண்டும். ஏன் என்றால் நமது குழந்தை எதிர்காலத்தில் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அவ்வாறு அவர்களை வடிவாக்கம் செய்ய இந்த அட்டவணைதான் அஸ்திவாரமாக அமைகிறது. எனவே மிக முன்ஜாக்கிரதையுடன் இந்த அட்டவணையைத் தயாரித்தால், ஒரு புறம் அவர்களது நல்ல குணங்களும், மறுபுறம் மாற்றம் காணவேண்டிய குணங்களும் இருப்பதை அறியமுடியும்.



சிங்கர்
நல்லை வசந்தம்
உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம்.
2015 ஓகஸ்ட் 25
யாழ்ப்பாணம்
மு.ப 9.00 - ந.ப 12.00
சுன்னாகம்
பி.ப 02.30 - பி.ப 05.30
2015 ஓகஸ்ட் 26
சங்கானை
மு.ப 9.00 - ந.ப 12.00
மானிப்பாய்
பி.ப 02.30 - பி.ப 05.30
2015 ஓகஸ்ட் 27
நெல்லியடி
மு.ப 9.00 - ந.ப 12.00
பருத்தித்துறை
பி.ப 02.30 - பி.ப 05.30
வட்டியில்லா தவணைக் கட்டணத்தில் பெற்றுக் கொள்ளுங்கள்
பழைய பொருள்களுக்கு மாற்றுமுறை விலைக்கழிவு
3 வருடத்திற்கு நீடிக்கப்பட்ட உத்தரவாதம்
பெறுமதிமிக்க பரிசில்கள்
சித்திரப் போட்டி
புதிய முறையில் - விரைவாக
சுவையான உணவு தயாரிப்போம்
சரியான முறையில் தையல் இயந்திரத்தைப் பாவிக்கவும் தையல் செயல்முறையை கற்றுக் கொள்வதற்கும்
உங்கள் தையல் இயந்திரத்தை இலவசமாக சேவை செய்து கொள்ளுங்கள்.
குளிர்சாதனப் பெட்டி சேவை
தண்ணீர் பம்பி சேவை
மோட்டார் சைக்கிள் சேவை
வீட்டிற்குத் தேவையான பெறுமதிமிக்க பொருள்களை கழிவுகளுடன் பெற்றிட – பரிசுகளை வென்றிட – நீங்களும் அருகிலுள்ள சிங்கர் ப்ளஸ் காட்சியறையை நாடுங்கள்
சுன்னாகம் 021-2240555
சங்கானை 021-2251100
சாவகச்சேரி 021-2270197
கிளிநொச்சி 021-2280199
பருத்தித்துறை 021-2263411
நெல்லியடி 021-2264937
யாழ்ப்பாணம் 021-2225408
முல்லைத்தீவு 021-2290180
மானிப்பாய் 021-2255343
கொடிகாமம் 077-6433888
(011) 5 400 400
http://www.singersl.com
www.facebook.com/singersl
சலுகைகள் செல்லுபடியாகும் காலம், 2015 ஓகஸ்ட் 31 வரை மட்டுமே
SINGER Plus



ஹரிஸ்சந்திர மல்லிகை சவர்க்காரம்
ஹரிஸ்சந்திர என்ற நாமம், தரமான உற்பத்திகளுக்கு இணையானதுடன்
சந்தையில் மதிப்புக்குரிய நாமமாக விளங்குகின்றது.
ஹரிஸ்சந்திர மல்லிகை சவர்க்காரத்திலுள்ள நீடித்து நிலைத்து நிற்கும்
மல்லிகையின் நறுமணம் நிச்சயமாக நாளாந்தம்
அதனை நீங்கள் பாவிக்கத் தூண்டும்.
HARISCHANDRA
Jasmine
SOAP
NO ANIMAL FAT
விலை - ரூ 40/-




HONDA
CBS
Combi Brake System
HONDA பாதுகாப்பு
நீங்கள் நிதம் விடும் மூச்சை விட நீங்கள் நிதம் தொடும் ப்ரேக்கின் உபயோகம் அதிகமாகலாம்...
மூச்சு ப்ரேக் இவையிரண்டும் இல்லையெனில் உங்கள் வாழ்க்கை முடிவுறும் என சற்றேனும் சிந்தித்ததுண்டா. இவையிரண்டும் உணர்வுபூர்வமானது. அதனால் தான் ஹோண்டா ஸ்கூட்டர் ப்ரேக் சிறப்பாக திகழ்கின்றது. ஆதில் அடங்கியுள்ள முன் மற்றும் பின் சக்கரங்களை ஒரே சமநிலையில் செயற்படுத்திடும் கொம்பி ப்ரேக் பொருத்தப்பட்டுள்ளமையால் குறைந்த தூரத்திலும் ஸ்கூட்டரினை பாதுகாப்பாக நிறுத்த உதவுகின்றது. நவீன தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டுள்ளமையினாலே ஹோண்டா ஸ்கூட்டர் உங்களையும் உங்கள் அன்பார்ந்தவர்களையும் பாதுகாத்திடும் சிறப்பெனும் பெயரினை தன்னகத்தே கொண்டுள்ளது. ஹோண்டா பாதுகாப்பு என்றும் சிறப்பு.
ரூ.220,500/-
ரூ.218,500/-
ரூ.199,500/-
Activa
Sri Lanka's Sole Authorised Distributor
Stafford Motor Co. (Pvt) Ltd.
தலைமை அலுவலகம்: 78/7 மருதானை வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 011-7607200 மோட்டார் சைக்கிள் வளாகம்: 161, கொழும்பு வீதி, ரட்டனப்பிட்டிய. தொலைபேசி: 011-7607450
இல. 425, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொலைபேசி: 065-7607200 மற்றும் நாடு முழுவதும் ஹோண்டா விற்பனை முகவர் வலையமைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.